உ
சிவமயம்.

சைவசித்தாந்த வைபவம்.

(காசிகானந்தரது தீய நாவைச் சேதிக்கும்
நியாய கட்கம்.)

பூவாளூர்ச்,
சைவசித்தாந்த சபை அக்கிராசனாதிபதி
சு. சாமிஐயர்தேசிகர்
இயற்றியது.

தேவகோட்டை
"எஸ்டேட் பிரஸில்"
பதிப்பிக்கப்பெற்றது.

1918.

உ

சிவமயம்

சைவசித்தாந்த வைபவம்.

திருமந்திரம்.

"வேதமோடாகம மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்பு மென்றுள்ளன
நாதனுரையிவை நாடிலிரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே."

உலக மனைத்தினையும் ஆக்கி நிறுத்தி யழித்து மறைத்து அருளும் பரம கருணாநிதியாகிய பரமசிவன், சர்வான்மாக்களும் தம்மை யடைந்து வழிபட்டு உய்யும்பொருட்டு, சிருட்டி யாரம்பத்திலே வேதம் ஆகமம் என்னும் இரண்டு நூல்களையும் அருளிச் செய்து, அவ்வான்மாக்களுக்குக் கொடுத்தருளினார். அந்த நூல்களிலே சொல்லப்படும் விஷயங்களாவன: பதி பசு பாச இயல்புகளாம். வேதத்திலே பதி பசு பாச வியல்புகள் பொதுவகையாகவும், ஆகமங்களிலே சிறப்பு வகையாகவும் ஓதப்பட்டுள்ளன. அதனால் வேதம் பொதுநூலெனவும், ஆகமம் சிறப்பு நூலெனவும் சொல்லப்படும்.

ஆன்மவர்க்கம் அபக்குவர் பக்குவர் என்னும் வேறுபாட்டால் உலகரும், சத்திநிபாதரும் என இருவகைப்படுதலின், உலகர் பொருட்டு வேதத்தைப் பொதுவகையாகவும், சத்திநிபாதர் பொருட்டு ஆகமத்தைச் சிறப்பு வகையாகவும் பரமசிவன் அருளிச் செய்வாராயினர்.

இனி, வேதத்தினும் பொதுவும் சிறப்புமென இருவகை யியல்புகள் உள்ளன. எனினும், ஆகமத்திற் கூறப்படும் சிறப்பியல்பை நோக்க வேதத்திலுள்ள சிறப்பியல்பு பொது வியல்பாய் நிற்கும். ஆகமத்தினும் பொதுவியல்பு, சிறப்பியல்பு என இரு வகை யியல்புகள் உள்ளன. ஆயினும், வேதத்திலுள்ள சிறப்

பியல்பை நோக்க ஆகமத்திலுள்ள பொதுவியல்பு சிறப்பியல்பாக நிற்கும். அனறியும், வேதத்தினுள்ள சிறப்பியல்பு அருகி நடந்து இலைமறை காய்போல அரிதினுணரப்படும். ஆகமத்தினுள்ள சிறப்பியல்பு தெளிந்த பொருளாய் வெள்ளிடை மலைபோல் எளிதி னுணரப்படும். பயன்றரு முறையினும் வேதத்திலுள்ள கன்ம காண்டம் பந்த நிலையினதாகிய போகத்தையே பெரிது முதவும். ஞானகாண்டம் முத்தியை யுதவுமேனும் பிரமபத விண்டுபத நிலைகளையே பெரிது முதவும். சிறுபான்மை உண்மை முத்தியை யுதவும் பகுதிகளு முளவாம். ஆகமத்திலுள்ள கன்மகாண்டம் பந்தத்தை யகற்றி முத்தி வகைபுட்பட்ட சாலோக்கியாதி பதங்களைக் கொடுக்கும். ஞானகாண்டமோ அப்பதமுத்தியின் மேற்பட்ட அபரமுத்தி பரமுத்திகளை அருளும்.

இவ்வாறு வேதம் ஆகமம் இரண்டும் வேண்டப்பட்டு, ஒத்து ஒழுகுவனவாம். அன்றி அவை தம்முண் மாறுபட்டனவாகா. சர்வஞ்ஞனாகிய முதல்வன் மாறுபாடுற உரையானென்பதும் உணரற்பாலதாம்.

இவ்வுண்மை இதன் மகுடத்திலங்கும் "வேதமொடாகம மெய்யாம்" என வெழுந்த திருமந்திரத்தானும், "வேதசாரமிதந் தந்திரம்" எனக் கிரியாபாதத்தும், "வேதாந்தார்த்த மிதஞ்ஞானம்" என ஞானபாதத்தும் ஓதும் காமிக வசனத்தானும், "வேதத்தொழி பொருள் வேதாந்தத் தீதில் பொருள்கொண்டுரைக்குநூல் சைவம்" எனவும் "வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தத் திறனிங்குத் தெரிக்கலுற்றாம்" எனவும் வரும் சித்தாந்தநூற் செய்யுட்களானும் இனிது போதரும்.

பரமசிவன் அருளிய நூலும் பொருளும் இங்ஙனமிருக்க, இடைக்காலத்திலே இந்திரன் பொருட்டுப் பிரகற்பதி உலோகாயத நூல் செய்தார். திரிபுராந்தசுரர் தபசை யழித்து அவர்கள் வலிமையைக் குறைக்கும் சூழ்ச்சியால் அவர்க்குப் போதிக்கும்படி மாயோன் பிடகநூல் செய்தார். அருகன் ஆருகத நூல் செய்தான். இவை வேதத்துக்குப் புறம்பான நூல்கள். கணாதரும் அக்கபாதரும் தருக்கநூல் செய்தார். சைமினி வேதத்திற் கரும

காண்டத்தை மேற்கொண்டு மீமாஞ்சை நூல் செய்தார். கபிலர் சாங்கிய நூல் செய்தார். இவை வேதத்தைத் தழுவிய நூல்கள். இன்னும், மாயோன் பாஞ்சராத்திர நூல் செய்தார். சுக்கிரன் தேவர்க்குக் கேடு சூழ்ந்து அசுரர் தலைவனாகிய சூரபன்மனுக்கு மாயாவாதம் போதித்தார். பதஞ்சலி பாதஞ்சல யோகநூல் செய்தார். இந்நூற்பொருளெல்லாம் ஒவ்வோர் மதங்களாய்க் கிளைத்தன. பிரகற்பதியும் மாலும் சைமினியும் சுக்கிரனும் அவ்வந்நூல்கள் செய்தமை ஒவ்வோரேதுப்பற்றியாம். அதனால் அவையே அவர்க்கு அபிமதமென்று கொள்ளலாகாது.

துவாபரயுக முடிவில் இற்றைக்கு ஐயாயிர வருடங்களுக்கு முன் வேதவியாசர் வேதத்து ஞானகாண்டப் பொருளைத் தழுவிப் பொருள் பலபடத் தோன்றும் சூத்திர வடிவமாகப் பிரமசூத்திரமெனவொன்று செய்தார்.

எத்தனை நூல்கள் எத்தனை மதங்கள் தோன்றினும், பரமசிவன் அருளிச்செய்த முதனூலாகிய வேதசிவாகமங்களும் அவை போதிக்குஞ் சைவசமயமும் தம் நிலை தளராது விளங்கி, உயிர்களுக்கு வேண்டிய இருமைப் பயனையும் உதவி வருகின்றன. முனிவர்கள் வாக்காகிய கற்ப சூத்திரங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள் இதிகாசங்களும் பிற்காலங்களிலே தோன்றி உபபலமாய் நடக்கின்றன.

புண்ணிய பூமியாகிய இப்பரதகண்டத்திலே தலங்கடோறும் ஆலயங்கள் அமைய, அவற்றிற் பரமசிவன் தமக்கு ஒரு வடிவமில்லாதவராயினும் உலகத்தார் தம்மை வழிபட்டு உய்யும்படி திருமேனி கொண்டு சிவலிங்க மூர்த்தியாய் எழுந்தருள, உமாதேவியார், கணபதி, சுப்பிரமணியர் முதலாயினோரும், அரி, பிரமன், இந்திரன் முதலிய தேவர்களும், அகத்தியர், வசிஷ்டர், மார்க்கண்டேயர், பதஞ்சலி முதலிய முனிவர்களும், முசுகுந்தன், நளன், இராமன் முதலிய சக்கிரவர்த்திகளும், பல அரசர்களும், அடியார்களுமானோர் காமிக முதலிய சைவாகமங்களின்படி பூசித்துத் திருவருள் பெற்று வருகின்றனர். அம்மட்டோ! மிருகங்கள், பறவைகள், ஊர்வன, நீர் வாழ்வன, தாவரங்கடாமும் சைவாகமப்

படி யமைந்த ஆலயங்களிலே சிவலிங்கப் பெருமானை வழிபட்டுப் பேறுபெற்றன வென்னின், வேறு யாது விளம்பல் வேண்டும்.

சிருட்டி காலந்தொட்டு இந்நாள்வரை பரமசிவனது திருவுள்ளப்பாங்கின்படி சைவசமயம் இத்துணை வைபவங்களோடுவிளங்கி உயிர்களுக்கு அருந்துணையாய் நின்று அருள்புரிந்து வருகின்றது.

இக்கலியுகத்திலே யுக வலிமையினாற்போலும் இடைக்காலத்துப் பௌத்தம், சமணம் என்னும் சமயங்கள் கதித்துச் சைவசமயத்துக்கு இடையூறு செய்யலாயின. அக்காலத்து முதல்வனாணையால் மாணிக்கவாசக சுவாமிகள், ஆளுடைய பிள்ளையார், அப்பமூர்த்திகள், முதலாயினோர் அவதரித்து அவற்றை யொடுக்கிச் சைவசமயத்தை ஓங்கச் செய்தனர். இது நிற்க;

வியாசர் இயற்றியதாய்ச் சொன்ன பிரம சூத்திரத்துக்கு இற்றைக்கு இரண்டாயிர வருடங்களுக்கு முன்னே ஸ்ரீகண்ட சிவாசாரியர் ஒரு பாஷிய மியற்றினர். அது சைவப்பகுதியுட்பட்டதாகும். அவர் காலத்திற்றானே மலயமா நாட்டிற் சங்காசாரியர் தோன்றி வடநாடு சென்று கலை பயின்று வல்லுனராகித் தமக்கு வாய்த்த அறிவின்படி பிரமசூத்திரத்துக்கு ஏகான்மவாதப் பகுதியுட்பட்ட மாயாவாத பரமாக ஒரு பாஷிய மியற்றினார். சைவநல மறியாத வடநாட்டுப் பிராமணருள் ஒருசாரார் சாதியபிமானங்கொண்டு, அவரது போதனையைத் தழுவி யொழுகலாயினர். பின் இராமாநுஜாசாரியர், ஆனந்த தீர்த்தாசாரியர் என்பவர்களும் பிரமசூத்திரத்துக்கு ஒவ்வோர் பாஷியமியற்றித் தத்தங் கொள்கைகளைச் சாதித்தனர். அவ்வாசிரியர்கள் கொண்ட கொள்கைகளை அவலம்பித்து நடப்பவரும் பலராயினர்.

ஸ்ரீகண்டாசாரியர் பிரமசூத்திரத்தினைச் சிவாத்துவித மதம் போதிப்பதென்பர். சங்காசாரியர் கேவலாத்துவித பரமென்பர். இராமாநுஜாசாரியர் விசிட்டாத்துவித நூலென்பர். ஆனந்த தீர்த்தாசாரியர் துவித நூலென்பர். இங்ஙனம் அச்சூத்திரம் பலரையும் மலையவைத்து இதுதான் பொருளென உண்மை யுணரவொட்டாது மறைந்து, பலரும் கலாம் விளைத்து இடர்ப்படும்படி செய்து நிற்கின்றது. வேதவியாசர் செய்த அச்சூத்திரத்தால் விளைந்த

முதற்பயன் மதக்கலகங்கள் நேர்ந்து பரதகண்டவாசிகள் பிளவு பட்டு ஐக்கியமின்றியானதேயாம்.

சைவமாந்தர் இவ்விட்ருட் சிக்காது வேத சிவாகம மெய்ப் பொருளுணர்ந்து, அந்நூல்வழி யொழுகி, ஆளுடைய பிள்ளையார் முதலிய சமயாசாரியர் அருளிச் செய்த தேவார திருவாசக முதலிய அருட்பாக்களை ஓதிச் சிவபெருமானை வழிபட்டு, அருளும் ஆனந்தமும் பெற்று வாழ்கின்றனர்.

தமிழ் மொழியிலே திருமூலநாயனார் திருமந்திரம் அருளிச் செய்து சைவசித்தாந்த உண்மைகளை இலங்க வைத்தார். திருக்கைலாச பரம்பரைச் சந்தான குரவர்களான மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாசாரியர், உமாபதி சிவாசாரியர் முதலாயினோர் சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் முதலிய பதினான்கு சாத்திரங்களை அருளிச் செய்திருக்கின்றனர். அச்சாத்திரங்களினாலே தமிழ்நாடு அடைந்த பயனுக்கு அளவில்லை.

இப்படியாகவும், இக்காலத்து அச்சங்கராசாரியரது கேவலாத்துவித மாயாவாத மதத்தை அவலம்பித்து ஒழுகுகின்றோமென்பாருட் சிலர், தம்மளவில் அடங்கி நில்லாது சைவசித்தாந்தச் செல்வர்களோடு சருவி இழிமொழி பகர்ந்து நிந்தைகள் பேசிச் சைவ நெறியை யிகழ்ந்து பழிபாவங்களுக்கு ஆளாகுகின்றனர். அவரது இழிமொழி பொதிந்த நிந்தைகளாற் சைவத்துக்கு வருங் கேடு யாதுமில்லையாயினும், அவர் சைவசித்தாந்தத்தின்மேல் ஏற்றும் பழிமொழிகளால், நம்மனோர் மனம் வருந்தாவண்ணம் அவற்றைப் பரிகரித்தல் கடமையாமென மேற்கொண்டனம்.

1. மாயாவாதிகளுட் கோவிலூர்க் "காசிகானந்த" ரென்பாரொருவர் கோலொன்றேந்தி "வேதபாஹிய பாசுபத தாந்திரிக துவித சைவ துர்வாத"மென நிந்தைமொழி தலை வைத்துச் சைவ சித்தாந்தத்தை இகழ்கின்றார். "வேதபாஹியமான ஆகமம்" என்கின்றார். "ஆகமத்திற் கூறாது கூறிய இவரது மார்க்கம் காக விஷ்டைக்குச் சமானமா" மென்கின்றார். "வேதபாஹிய பாசுபத தாந்திரிக துவித சைவம்" "அவைதிகமாய சைவசித்தாந்தம்" என்பனவாகப் பலபல நிந்தைமொழி புகல்கின்றார்.

மற்ரெரிடத்தில் எமக்கோ, "பரமேஸ்வரன் பகர்ந்த பல வாகமங்களும, தேவாரம், திருவாசகம், திருமந்திரம் முதலிய மகிமை வாய்ந்த பொது நூல்களும், சிரோபூஷணமாக வுடன்பா டேயாம்" என்ருர். இஃதுண்மையானுல் ஆகமத்தை நிந்தித்த தும் அதிற் கூறப்படும் சைவசித்தாந்தத்தை இகழ்ந்ததும் என்ன மயக்கமோ! திருமந்திரத்தில் "வேதமொடாகமம் மெய்யாம்" "இரண்டந்தம்பேதமதென்பர் பெரியோர்க்கபேதமே" என்பவற்றை யுணராததென்னையோ. இவர் பரமேசுவரன் பகர்ந்த ஆகமம் எனத் தெரிந்தும் அவ்வாக்மத்தை நிந்தித்தலும், அதிற் சிவன் பகர்ந்த சைவசித்தாந்தத்தினை நிந்தித்தலும் சர்வஞ்ஞராகிய சிவனுக்குச் சம்மதமாகுமா! அவரவர் செய்தவினைக்கு ஏற்ற பயனளிக்கும் பரம சிவன் இந்நிந்தைக்குப் பயனளிக்கமாட்டாரோ. சிவநிந்தை சிவ சாத்திரநிந்தை சைவநிந்தையாகிய இவ்வதிபாதகங்கட்குக் கழு வாயு முண்டுகொலோ!!

2. "தூர்வையாசகப் படல" த்தை யெழுதிஞேர் "நானே பிரமமெனக் கொண்ட மார்க்கம் வேத சிவாகமாதி சகல சாஸ்திர விரோத" மாம் என்றதைப்பற்றி வருந்திஞர். வேத சிவாகமங்க ளும் அவற்றின் வழிவந்த சகல சாஸ்திரங்களும் நாம் பாசபந்த முடைய பசுக்களென்றும் நமக்குப் பதியாய்ப் பிரமமாயுள்ளவர் பசுபதியெனப் பெயரிய பரசிவமே யென்றும் கூறுவதால், பசுவா கிய நாமே பிரமமென்பது அவற்றிற்கு விரோதமேயன்றே! இவர் அது கேட்டு வருந்துவதெற்றுக்கு.

3. இவர் அவ்விடத்துத் திருமந்திரம் ஒன்றைக் காட்டிஞர். அதில் அவமற்ற வேதாந்த சித்தாந்தம் சிவனைப் பரமனுட் சீவ னுட் காட்டும் என்றிருப்பதால், வேதாந்த சித்தாந்த மிரண்டும் அவமற்றதென்றும், அந்நெறிகள் ஆன்மாவினுள்ளே பரமான்மா வாயுள்ள சிவனைக் காட்டும் என்றும் வெளியாயிற்று, அது சைவ சித்தாந்திகட்கே சாதகமாயுள்ள கொள்கையாம். அதுபற்றி இவ ருக்கு வந்த ஆக்கமென்னையோ. அவமற்ற வேதாந்த மென்றி ருக்க ஆபாச மார்க்கமென்னலாமோ வென்கின்ருர். இங்கே கூறி யது சிவன் உபநிடதமாகிய வேதாந்தங்களி லுரைத்த கொள் கையை. அக்கொள்கையும் சிவன் சிவாகமங்களில் ஞானபாத

மாகிய சித்தாந்தத்துக் கூறுங் கொள்கையும் ஒன்றென்று திருமூலரே கூறினர். அது தெரித்தற்கே அவமற்ற வேதாந்த சித்தாந்தம் என இரண்டனையும் ஒருப்படுத்து ஈண்டுங் கூறினர். பரமனாகிய பிரமம் சிவனே யென்றுங் காட்டினர். இவ்வுரைக்கு மாறாகச் சிவமென வேறில்லை, நாமே பிரமம் என்று கூறும் மதம் வேதாந்தமன்று; மாயாவாதமாம். அவ்வேகான்மவாதமாயாவாதிகள் சொல்லும் நாமே பிரமமென்னுங் கொள்கை பொருத்தமற்றதெனப் பூர்வபக்கமாக வைத்து ஆகமங்களிற் பரமசிவனே கண்டித்து ஒதுக்குகின்றார். உபநிடத வேதாந்தத்தை அருளிச்செய்த சிவனே ஆகமத்தில் அவ்வாறு கூறி யொதுக்கினராகலின், அம்மாயாவாதக் கொள்கை ஆபாசமார்க்கமேயா மென்பதற்கு ஐயமென்னை. அவமுற்றஅவ்வேகான்மவாத மாயாவாதிகளும்வேதாந்திகள் எனத்தம்மைக்கூறுதலின், அவர்பாற் சொல்லமைப்பொருட்டே திருமூலர் இதனை அவமற்ற வேதாந்தமென வேறுபடுத்தியுரைத்தார்; ஆதலின், இவர் அதுபற்றி வருந்துதலிற் பயனின்றாம்.

4. இனி, பதிபசுபாசமாகிய பதார்த்த மூன்றும் அநாதி நித்தியப்பொருள்களாமென்று சகல சாஸ்திரங்களும் உரைக்கும் எனக்கூறியது வழுவென்கின்றார். நித்தியா நித்திய வஸ்து விவேகம் என்பதன் பொருளையுணரவேண்டு மென்கின்றார். அதற்குத் திருவிளையாடற் புராணத்துள்ள:—

(1.) "மெய்மை யாம்பொருள் விவேகமும் வேறுபாடாய
பொய்மை யாம்பொருள் விவேகமும் புந்தியுட்டோன்ற
விம்மையாசையு மறுமையி லாசையு மிகந்து
செம்மையாகிய கருத்தராய்ப் பரகதி தேர்வார்."

(2.) "புத்தராதியோர் புறவுரை நெறிகளும் பொய்யா
நித்தவேதநூ றழுவிய வகையுரை நெறியுஞ்
சித்தமாசறுத் தரனருட் டெளியா வதனுன்
மித்தையாணவத் தொடக்கறு தில்லையாம் வீடும்."

(3.) "வேதவாகமச் சென்னியில் விளைபொரு ளபேதம்
பேதமாகிய பிணக்கறுத் திருட்பிணி யவிழ்த்து
நாதனாகிய தன்னையு மென்னையு நல்கும்
போதனாகிய குருபரன் வருவதெப் பொழுதால்."

என்னும் பாக்களைப் பிரமாணமாகக் காட்டினர்.

திருவிளையாடற் புராணத்தில் வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலத்தில் "மெய்மையாம் பொருள் விவேகமும்" என்பது 10-ம்பாட்டு. புத்தராதியோர்என்பது 11-ம் பாட்டு. "வேதவாகமச் சென்னியில்" என்பது 13-ம்பாட்டு. இவர் 11-க்கும் 13-க்கும்இடையிலுள்ள 12-ம் பாட்டாகிய,

> "பத்திசெய்தா னருட்பெறும் பத்தருக் கன்றி
> முத்தியெய்தரி தெனமறை மொழிவதப் பொதுநூல்
> சத்தியப்பொருட் டெளிவெலாஞ் சத்திநி பாதர்க்
> குய்த்துணர்த்திய தாகம மென்பர்மெய் யுணர்ந் தோர்."

என்பதனை இங்கேகாட்டாது மௌனமாக விட்டு விட்டார். இப்படி விட்டதற்கு ஏது வென்னை? இதன் பொருள் தங்கொள்கைக்கு விரோதமா மென்பதோ. அவ்விரோதம் யாது? சிவபத்தருக்கன்றி முத்தி யெய்தரிதென மறைமொழியு மென்றும், அம்மறை பொது நூலென்றும், அவ்வேத மெய்ப்பொருட்டெளி வெல்லா வற்றையும் சத்திநிபாதர்க்கு உய்த்துணர்த்தியது ஆகமம் எனவும் உண்மை யுணர்ந்த ஞானிகள் கூறுவாரென்பதோ. தம் கொள்கைக்கு மாறுகவந்தாலும் உண்மையை யொளிக்கலாமா. தம் மனச்சாட்சிக்குத் தெரிந்தவொன்றை அம்மனச்சாட்சிக்கு மாறுகப் போசலாமா. இங்கு இப்படி யொளித்தவர் மற்றிடங்களில் வேறியாது செய்யமாட்டார். அன்பர்களே! இவரது வஞ்சனையைப் பாருங்கள். பிடித்த கட்சியைச் சாதிக்க வேண்டுமென்பதே யன்றி உண்மையில் நாட்டமில்லை யென்பது இதனால் நன்கு புலப்படுகின்றது.

இனி, பதி பசு பாசம் என்னும் திரிபதார்த்தம் நித்தமென்பதற்கும் நித்தியா நித்திய வஸ்து விவேகத்திற்கும் என்ன சம்பந்தம். அதினும் இங்கே காட்டிய செய்யுட்களுக்கும் அதற்கும் என்ன தொடர்பு.

வாதவூரடிகள் தம் மறிவில் "நித்தியா நித்திய வஸ்து விவேகம் உதிப்ப, இகபரபோக வைராக்கிய முற்றுச், சித்த சுத்தியுடையராய்,முத்திநெறியையாராயத்தொடங்கி,வேதத்துக்குப்புறம்பான உலோகாயதம், பௌத்தம் சமணம் என்னும் மார்க்கங்கள் பொய் மார்க்கங்களாம்; வேதத்தைத் தழுவிய மீமாஞ்சகம், தார்க்கிகம், சாங்கியம், மாயாவாதம், பாஞ்சராத்திரம், பாதஞ்சலம் முதலி

ய மார்க்கங்களும் அறிவின் கண்ணதாகிய அஞ்ஞான மயக்கத்தை யறுத்துச் சிவபெருமானுடைய திருவருளை உணர்த்தமாட்டா; அதனால், ஆணவமலபந்தம் நீங்குதலும்இல்லை; முத்திசித்தித்தலும் இல்லையாம். சிவபத்தருக்கன்றி மற்றையோர்க்கு முத்திசித்திப் பதரிதென்று வேதங்கூறும். பொதுநூலாகிய அவ்வேதத்தின் மெய்ப்பொருள் விளக்கத்தைச் சத்திநிபாதத் துத்தமர்க்கு உய்த் துணர்த்தியது சிறப்புநூலாகிய ஆகமமாம் என்று உண்மை யுணர்ந்த ஞானிகள் கூறுவார்கள். ஆதலின், அவ்வேதாகமமுடி வில் விளங்கும் மெய்ப்பொருளின் அபேதவாதம் பேதாபேதவா தம் பேதவாதமாகிய பிணக்குக்களை அறுத்து அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானந்தந்து பதியாகிய தன்னையும், அடிமையாகிய என்னையும் தரிசனஞ் செய்து வைக்கின்ற ஞானசாரியார் எப்பொ ழுது வருவாரோ!" என்று காதலித்துரைத்ததாக அப்பாக்கள் புகல்கின்றன.

தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனாரும் ஞானம் என்னும் பகுதியில் நிலையாமை துறவு மெய்புணர்தல் என வைத்து, செல்வ நிலையாமை யாக்கை நிலையாமைகளையும், அகப்பற்றுப் புறப்பற் றுக்களின் ஒழிவையும், கேட்டல் சிந்தித்தல் தெளிதல்களால் வரும் மெய்ப்பொருளுணர்வையும் போதித்தார்.

இவ்விஷயத்துக்கும் பதிபசுபாசம் நித்தியமென்பதற்கும் யாது சம்பந்தம். முரட்டுத்தனமாகச் சூட்டுக்கோல் கொண்டு ஆங் காரத்தோடு வந்த இவர் இது மாட்டுமன்றையன்று, வித்வகோஷ் டியர்க்கும் என் உணராததென்னை. "கல்லாதவரு நனிநல்லர் கற் றார்முற், சொல்லாதிருக்கப் பெறின்" என்பதை யறியார்போலும்.

மேல், அவர் "பரமேசுரனால் உபதேசம் பெற்ற மணிவாசகப் பெருந்தகை வேறுபாடாய எப்பொய்ம்மையாம் பொருளை விவே கஞ் செய்தனர்" என்று முரைத்தார். இவர் காட்டிய செய்யுட் கள் உபதேசம் பெறுதற்கு முன்னிருந்த நிலைமைகளைப் போதிப் பனவாக, அதனை யோசியாமல் உபதேசம் பெற்று விவேகஞ்செய் ததாகக் கூறுவது சாலவியப்புடைத்து! அம்மம்ம! இவரது அறி வுக்கு எதனை யொப்பிடலாம்!! முசலாக்கிரமதியினரும் நல்லவர்

யிருப்பர்! அந்தோ பாவம், இவர் சும்மாவிராது இந்த வேலையிற் றலையிட்டது மிக்க பரிதாபம்! உபதேசமாதற்குமுன் நிகழ்ந்த இது நிலையாமை யுணர்தல். பதிபசுபாச உணர்வு இங்கு சித்திக்க மாட்டாது. நிலையாமையை யுணர்தல் முன்செய்த புண்ணிய விளைவினுலாம். அகப்பற்றுப் புறப்பற்று நீங்குதல் மலபரிபாகம். சித்தசுத்தி பெறுதல் இருவினையொப்பு. இந்நிலையிற் சத்திநி பாதம் பிறந்து குருவரவில் நாட்டமுண்டாம். அப்பக்குவநிலையை நோக்கி ஞானசாரியர் எழுந்தருளித் தீக்கை செய்து ஞானத்தை உபதேசிப்பர். அந்த ஞானத்தால் அம்முப்பொருளின் இயல்பு செவ்வனே தோன்றும். அவ்வாறே வாதவூரடிகள் சரிதத்தினும் நிகழ்ந்தமை திருவிளையாடற்புராணம் திருவாதவூரடிகள் புராணங் களைப் படித்து, அல்லது கல்வியறிவுடையார்மாட்டுக் கேட்டு அறிந்துகொள்ளக் கடவர். அந்தோ! இவர் நூற்பயிற்சியின்றி அபிமானமாத்திரத்தால் எழுந்து தடுமாறி அலக்கணுறுதற்கு யாம் மிக இரங்குகின்றோம்! இவர் குழுவினருள் இவருக்கு இவற்றைத் தெளிவித்துத் திருத்தி யுபகரிக்கவல்ல அறிவாளர் ஒருவருமிலர் போலும்.

இன்னும், ஈண்டு இவர் எடுத்துக் காட்டிய புராணச்செய்யுட்கள் வேதம் பொது நூலென்றும், அதைத் தழுவிய மாயாவாதத் தால் அஞ்ஞானமொழிதலும், வீடு சித்தித்தலு மில்லையாமெனவும்; ஆகமம் சிறப்புநூலெனவும் அதன் போதத்தால் அஞ்ஞான நீங்கி முத்தி சித்திக்குமெனவும் உரைத்து நின்றமையால், இவரது மாயாவாதம் பாறிவீழ்ந்து பாழ்பட்டுப்போயது. அவ்வுரை இவரது மூர்த்தாவிற்கு ஓர் அசநிபாதமாய் முடிந்தது. அதனை யறியாது எடுத்தாண்ட இவர்கதி சக்கரவலியறியாது தலையிற்றாங்கிய சலந்தரன் கதியாயிற்று. பரிதாபம்! மிக்க பரிதாபம்!!

5. இனி முப்பொருளும் அநாதிநித்தமோ வென்பதனையும் அவ்வாறு சைவநூல்கள் கூறுகின்றனவோ வென்பதனையும் அறிய விரும்புவாராயின், அது காட்டுதும். இவர்தமக்கும் பிரமாணமென ஒத்துக்கொண்ட திருமந்திரம்:—

"அறிவறி வென்ற அறிவு மனாதி
அறிவுக் கறிவாம் பதியு மனாதி

யறிவினைக் கட்டிய பாச மனாதி
யறிவு பதியிற் பிறப்பறுந் தானே"

"நாடும் பதியுடனற்பசு பாசமு
நீடுமா நித்த நிலையறி வாரில்லை
நீடிய நித்தம் பசுபாச நீக்கமு
நாடிய சைவர்க்கு நந்தியளித்ததே."

"பதிபசு பாசம் பயில்வியா நித்தம்
பதிபசு பாசம் பகர்வோர்க் காருக்கிப்
பதிபசு பாசத்தைப் பற்றற நீக்கும்
பதிபசு பாசம் பயில நிலாவே"

"படைப்பு மளிப்பும் பயிலிளைப் பாற்றும்
துடைப்பு மறைப்புமுன் றோன்ற வருளுஞ்
சடத்தை விடுத்த வருளுஞ் சகலத்
தடைத்த வனாதியை யைந்தெனலாமே."

திருவருட் பயன்.

"ஏகனநேக னிருள்கரும மாயை யிரண்
டாகவிவை யானாதி யில்."

தணிகைப்புராணம்—நந்தியுபதேசம்.

"இறைதநூலின ரியம்புவ பலதிற மெண்ணிற்
கறைவெனத் தலைமயங்குவ கழிக சைவத்த
மறைதியாலறி வரியன நிறைவின வலிய
வனாதிசத்தி நித்தியத்தன வைந்துமெய்ப் பொருளே."

"பதியுமப்பதிக் கடிமையாம் பசுவுமப் பசுவின்
முதிருமாணவப் பகையுமம் முழுப்பகை தமிப்பக்
கதியமாயையுங் கருமமு மெனப்படு மவைதா
மதியுளோர்கள் பின்னிரண்டையு மலத்தொடு மொழிவர்."

எனக் கூறுமாற்று லுணரக்கடவர். இவைபோல்வன இன்னும் பலவுள.

6. அவர் மற்றோரிடத்தில் "பதிபசு பாசங்கள் அநாதி நித்தியங்கள் என்றார். பாசம் எங்ஙனம் நித்தியமாம்" என வினவினார். இதனால் பதி அநாதி நித்திய மென்பதிலாவது பசு அநாதி நித்திய மென்பதிலாவது ஆக்ஷேப மொன்றுமில்லைப் போலும்.

மூன்றும் நித்தமேயென்பதனை மேற்காட்டினுமாயினும் தனித்தனி பசுபாசங்களைப்பற்றியும் பேசுவாம். நித்தம் என்பதன் பொருள் தோற்றநாசம் இல்லாதிருப்ப தென்பதாம்.

பசு நித்தமென்பது, சிவப்பிரகாசம் "எண்ணரிதாய் நித்த மாய்" என்பதனாலும்,

ஆணவமலம் நித்த மென்பது-சிவப்பிரகாசம் "செம்பினூறு களிம்பேய்ந்து நித்தமூலமலமாயறிவு முழுதினையு மறைக்கும்" என்பதனாலும்,

மாயை நித்தமென்பது, சிவஞானசித்தியார் "நித்தமாயரு வாயேக நிலையதா யுலகத்திற்கோர் வித்துமாய்" சிவப்பிரகாசம், "உருவாதி சதுர்விதமா யொன்றொன்றொவ்வா வுண்மையதாய் நித்தமா யொன்றாய்" என்பவற்றாலும் இனிது போதரும்.

7. இனி அவர் பாசத்தினும் ஆணவமலத்தைப்பற்றி எங்ங னம் நித்தியமாமென ஆசங்கை செய்திலர். மாயை நித்தியமா குமா எனவுங் கேட்டிலர். வறிதே பாசம் பாசம் என்கின்றார். இவர் பாசம் என்று கூறுவது பிரபஞ்சத்தையென்று தோன்று கின்றது. பிரபஞ்சத்தை நித்தமென்று கூறுவார் ஒருவருமிலர். பிரபஞ்சம் அநித்தியமாம். அது,

"மண்டனில் வாழ்வும் வானத் தரசயன் மாலார் வாழ்வும்
எண்டரு பூத பேத யோனிக ளியாவு மெல்லாங்
கண்டவிந் திரமா சாலங் கனாக்கழு திரதங் காட்டி
யுண்டுபோ லின்றாம் பண்பி னுலகினை யசத்து மென்பர்."

எனச் சிவஞான சித்தியாரினுங் கூறப்பட்டது. உண்டுபோலின் றுதல் நெடுங்கால நிலைபெறுவதுபோலக் காட்டி விரைவிலழிந்து போதல். "இல்லையெனுமாயையி லிட்டனை நீ" எனக் கந்தரனு பூதியிற் கூறியதும் அழிந்துபோவதாய பிரபஞ்சவாழ்வில் இருத் தினை" என்றபடியாம்.

திருவாசகத்தில் "பொய்யாய செல்வம்" என்றதும், தேவா ரத்தில் "பொய்யினான் மிடைந்த போர்வை" "பொய்விராமேனி தன்னைப் பொருளெனக் காலம்போக்கி" என்பனவும் நிலையின்றி அழியு நீர்மையினையே குறிக்கும்.

9. இனி, இருள்வயப் பட்டிருந்த கண்ணினையுடையோன் ஆதித்தவொளி வாய்ப்பப்பெற்றபொழுது ஆதித்தவொளியினை யே கண்டு இருளைக்காணாதவாறு போலச் சிவத்தைத்தரிசிக்கப் பெற்றோர் அச்சிவத்தையே யன்றி வேறொன்றையுங்காணார். அது பற்றியே சிவானந்த மாலையில் "எங்குஞ் சிவமொழிய வேறில்லை, அங்கந்திரள் கருவி யாணவமாம்—பொங்குமிருள், மைசெய்தமா மாயை மாயையினை மற்றனைத்தும் பொய் பொய்" எனத் தமது சிவாநுபூதி நிலையைக்கூறினார்.

காசி காண்டத்திலே "கானலிடைத் தெண்ணீருங் கயிற்றினில் வாளரவு மலைகடலிற்பட்ட, கூன்முதுகிப்பியிற்றோன்றும் வெள் ளியுமம் முதலுண்மை குறிக்கிற்றீரும், ஆனவைபோனினையறி யிற்றோன்று சகமனைத்தும் நில்லாதழியுமாற்றால், தேனவிழ்பூங் கடுக்கையணி செல்வ னிணதறைகழற்றாள் சென்னிசேர்ப்பாம்" என்றதும் அந்நீர்மையதேயாம்.

சிவஞான சித்தியாரில் "பரஞானத்தாற் பரத்தைத்தரிசித் தோர் பரமே பார்த்திருப்பார் பதார்த்தங்கள் பாரார்" "ஞாதிரு ஞான ஞேயந்தங்கிய ஞானஞ் சங்கற்பனை ஞானமாகும், திருஞான மிவையெல்லாங் கடந்த சிவஞானமாதலாற் சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பார்" எனவருவனவற்றாலும் அவ்வுண்மை தெளியப்ப டும். பட்டினத்தடிகள் திருக்கழுமலமும்மணிக்கோவையில் இவ்வுண் மை தோன்றவே "எந்தைநின், திருவளர்நாட்டங் கருணையிற்பெற லும், யாவையுமெனக்குப் பொய்யெனத் தோன்றி, மேவருநீயே மெய்யெனத் தோன்றினை, ஓவியப்புலவன் சாயல் பெறவெழுதிய, சிற்பவிகற்ப மெல்லா மொன்றிற், றவிராது தடவினர் தமக்குச், சுவராய்த் தோன்றுந் துணிவு போன்றனவே" என அருளிச் செய்தாரென்பதும் உணரக்கடவர். "பித்திகை வடிவங் காண்பார் க்குச் சித்திரம் இன்றாயவாறு போல" எனச்சிவஞான போதவுரை யில் வருவதுங் காண்க.

சூட்டுக்கோற்கையர் இச்சித்தாந்தநயங்களை யுணரும் மதுகை யின்றி, இப்பிரமாணங்கள் மாயை நித்திய மன்றென்பதற்குத் தம க்குத் துணைசெய்யுமென நினைந்து எடுத்துக்காட்டினார். மாயை

காரணம். பிரபஞ்சம் காரியம். மாயை நித்தம். பிரபஞ்சம் அநித்தம். சிவசந்நிதானத்தில் இப்பிரபஞ்சம் அசத்தாய் முனைத்து நில்லாமையின், அச்சிவத்தைப் பொருந்திய ஞானிகள் பிரபஞ்சத்தைக் காணமட்டார். சத்து அசத்துக்களின் இயல்பைச்சித்தாந்தநூல் வல்லார் வாய்க் கேட்டுணரக்கடவர். அங்ஙனமின்றி வறிந்த கரைதல் மாபன்றும். நிலையாமையுணர்தல் வேறு. பாசம் அசத்தாயொழிதல் வேறு. முன்னது பக்குவநிலையில் நிகழுப்நிகழ்ச்சி. பின்னது சீவன்முத்தி முதலிய முத்திநிலைக்கண் நிகழும் நிகழ்ச்சியாம். இவர் அவ்வேறுபாடுணராது இரண்டனையும் ஒன்றாகக்கருதி எல்லாப் பாட்டையும் ஒருங்கு எடுத்துப்போட்டுக் குழறுபடையாக்கினர். மாயாவாதிகள் பெரும்பான்மையும் இவ்வாறே செய்வர். கல்வியறிவில்லாமையே அதற்குக் காரணமாம்.

இனி, சிவனுக்குரிய பிரமத்தன்மையைச் சீவனுக்குச் சொல்வது தகாதென்று தூர்வையாசகப்படல வசனகர்த்தர் எழுதியதைப்பற்றிப் போதிய நியாயஞ்சொல்லிச் சீவனுக்குப் பிரமத்தன்மையுண்டென்று நாட்டாமல், சைவர்களுஞ் சிவனுக்குரிய குணங்கள் யாவும் சீவனுக்குண்டென்று கூறுகிறார்களெனப் பல பாட்டுக்களை எடுத்து எழுதுகிறார்.

மாயாவாதிகள் ஆன்மாவே பிரமமென்கின்றனர். சைவர் சிவனே பிரமமென்கின்றனர். சிவம் அநாதிமலமுத்தபதி. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில் செய்யும் பிரமம். ஆன்மாவோ அநாதிமலபெத்தன். ஐந்தொழிலிற்பட்டு உழலும பசு. இவ்வேறுபாடுகளுடைய பதியும் பசுவும் ஒத்தவியல்புடையவாதல் அல்லது ஒன்றாதல் எப்படி? முத்திநிலையிலே சிவகுணங்கள் ஆன்மாவுக்கு வருகின்றனவே யென்கிறார். சிவகுணங்களில் அநாதிமுத்தத்தன்மை ஆன்மாவுக்கு எவ்வாறு வரும். அநாதியிற் பெத்தனாயிருந்தவனை அநாதி முத்தனாயிருந்தானென்று சொல்லவியலுமா. முத்தியடைந்தாலும் சிவசாட்குண்ணியங்களை ஆன்மா அடைந்தாலும் ஐந்தொழில் செய்யுமுரிமை ஆன்மாவுக்கில்லை. சிவனுக்கே யுண்டு. சாட்குண்ணிய நிலையைச் சிவன்கொடுக்கிறான். ஆன்மா பெறுகின்றான். சிவன் ஆனந்த சொரூபி. ஆன்மா சிவானந்தத்தை அநுபவிக்கிறான். சிவன்

அறிவிக்கும் சித்து. ஆன்மா அறிவிக்க அறியும் சித்து. இன்னும், அவ்விருபொருளுக்கும் இயல்பு ஒன்றன்று. அது பற்றியே முத்தியில் ஆன்மா சிவத்தோடு அத்துவிதமாகக் கலந்து சிவானந்த நுகருமென்பர்.

சிவனுக்குரிய குணங்கள் முத்தியில் ஆன்மாவைப்பற்ற ஆன்மா சிவம் போலவே விளங்குமென்பது சிவ சங்கிராந்தவாதம். அது சைவசித்தாந்தமன்று. அவ்வப்பொருளின் குணம் அவ்வப் பொருளிலிருக்குமேயன்றி ஒன்றன் குணம் ஒன்றிற் சங்கிரமிக்க மாட்டாது. ஒருபொருளுக்கு முன்னில்லாத குணம் புதிதாய் வரவு மாட்டாது. ஆறு குணங்களும் சிவனுக்கு இயல்பாயுள்ளவை. அதனால் அச்சிவம் மலபந்தமடையவில்லை. ஆன்மா அக்குணங் களின் இயல்பு முன்னில்லாமையால் மலபந்தமடைய நேர்ந்தது. முத்தியில் அவ் வறுகுணங்களையும் சிவன் கொடுத்து உபகரிக்க அவ்வுபகாரத்தைப் பெற்று மலபந்தமடையாது சிவானந்த மடைந்திருக்கின்றது. உதாரணமாக, கண் ஒன்று, கண்ணுக்கு ஒளியொன்று. ஒளிக்குக் காணுங் குணம் ஒன்று. காணுந் தொழில் ஒன்று இப்படி நான்கு தன்மைகளை இங்கு வைத்து விசாரிப்போம். கண் இருளோடு கூடியபொழுது இருளால் மறைப் புண்டு ஒன்றனையுங் காணவில்லை. ஏன் காணவில்லை. கண் கெட்டதா? இல்லை. கண்ணொளி கெட்டதா? இல்லை. ஒளிக்குக்காணுங் குணங் கெட்டதா? இல்லை. ஆனால் இருளின் உபாதியால் காணுந்தொழில் நிகழவில்லை. பின்பு சூரியோதயமானவுடன் கண்ணினொளி அச்சூரியனது ஒளியோடு கூடச் சூரியனது ஒளி கண்ணுக்கு உபகாரஞ்செய்து எவற்றையுங் காட்டுகின்றது. கண் அச்சூரியவொளியைப் பெற்றுக் காணுகின்றது. அதாவது காணுந்தொழில் நிகழ்கின்றது. இங்கே கண்ணுக்காவது ஒளிக் காவது காணுங்குணத்துக்காவது ஒரு மாற்றமுமின்றி யிருந்து காணுந்தொழில் மாத்திரம் முன் நிகழாமலும் பின் நிகழ்ந்தும் ஒரு மாற்றமுண்டாயது. அவ்வாறே வியாபக நிலையினையும் வியாபக அறிவினையும் உடைய ஆன்மா, தன்னோடு வியாத்தியாயிருந்த ஆணவமலத்தின் சத்தி தனது வியாபக அறிவைத்தடுக்க; அறிவு மறைப்புண்டு அறியாதிருந்தது. சர்வவியாபகமான சிவம் பிரகா-

சித்தபொழுது சிவத்தின் முன்னே முனைத்து நிற்றலாற்றாது மல விருள் மழுங்க, ஆன்ம அறிவு சிவப்பிரகாசத்தோடு கூடி அதனை அநுபவித்து ஆனந்தமடைந்தது. சூரியப்பிரகாசத்தோடு கலந்த கண்ணை இருள்மறைக்க இயலாமைபோலச் சிவப்பிரகாசத்திற் கலந்த உயிரை மலம் மறைக்க இயலாது வலியழிந்திருக்கும்.

இந்த உவமானத்தில் கண் எப்படிச் சூரியகிரணத்தைத்தான் சங்கிரமித்துப் பெற்றுச் சூரியனாக அல்லது சூரியகிரணத்தை யுடையதாகவில்லையோ, அப்படியே முத்தியினும் ஆன்மா சிவ குணத்தைச் சங்கிரமித்துப் பெற்றுச் சிவமாவதில்லை. சிவனது உபகாரத்தைப்பெற்றுச் சிவானந்தத்தை யநுபவிக்கும். அதுபற் றியே திருவடிநீழலை யடைதல் முத்தி என்று சம்பிரதாயமாகக் கூறுவர். திருவடியென்றது சிவசத்தியை. சத்தியாவது சிவ குணம். அதுவே ஞானமெனவும், அருளெனவும் சொல்லப்படும். சிவனது குணமாகிய ஞானத்தைத் திருவடியென்று கூறுவது சைவசித்தாந்த சம்பிரதாய வழக்காம். இவ்வுண்மைகளைத் திரு மூலநாயனார் திருமந்திரத்தில்,

"தானுந் தலைப்பு மறியார் கலதிகள்
காலந்தச் சத்தி யருளென்பர் காரணம்
பாலொன்று ஞானமே பண்பார் தலையுயிர்
காலந்த ஞானத்தைக் காட்ட வீடாகுமே."

"சிந்தையி னுள்ளே எந்தை திருவடி
சிந்தையு மெந்தை திருவடிக் கீழது
எந்தையு மென்னை யறிகிலா னாகி
யெந்தையை யானு மறிகிலே னே."

"கால்கொண்டென் சென்னியிற் கட்டறக் கட்டற
மால்கொண்ட நெஞ்சின் மயக்கிற் றுயக்கறப்
பால்கொண்ட வென்னைப் பரன்கொள்ளச் சாடினான்
மேல்கொண்டென் செம்மை விளம்ப வொண்ணாதே."

"முத்தியி லத்தன் முழுத்த வருள்பெற்று"

"தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே."

தணிகைப் புராணம்-சிவபோகம்.

"ஒன்றுறு மதனா லொருபொருளாகா திரண்டினால் வேறுமா காது
தொன்றுறு நிலையே நிலையதாய்ச்சேர்ந்து தன்னாலுந் தன்னுரு மையுமற்
றன்றுமா ணவத்தி னழுந்தியாங்கறிவா யறிவினா லழுந்தியங் கறிவு
பொன்றியும் பொன்று தவசமாயின்பப் புணரிவாய் மடுப்பது போகம்."

சிவஞான சித்தியார்-சிவப்பேறு.

"மாயமெலா நீங்கியருள் மலரடிக்கீ ழிருப்பன்
மாறாத சிவாநுபவ மருவிக் கொண்டே."

"அருக்கன் புகுத விருள்போம் அடியிற்பொருந்த மலம்போமே."

"உயிர்க்குத் தங்கவரன் ஞானக்கண் கொடுத்தருளினாலே
சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன்காணே."

"அரனணுகுமலம் போக்கியம்பொனடிக்கீழ் வைப்பன்"

"உம்பர்பிரா னுற்பத்தியாதிகளுக்குரிய னுயிர்தானுஞ்
சிவாநுபவ மொன்றினுக்கு முரித்தே."

"சிவனருட்சித்திவனருளைச் சேருஞ் சித்தவன்றான்
பவங்கேடு புத்தி முத்தி பண்ணுஞ் சித்தவற்றிற்
படியுஞ்சித் தறிவிக்கப்படுஞ் சித்து மிவன்றா,
னவன்றானேயறியுஞ் சித்தாதலினா லிரண்டு
மணைந்தாலு மொன்றாகாதநியமா யிருக்கும்."

"அப்பணைந்த வுப்பேபோல் விரும்பி அமலன் அணைந்து"

(இது எண்குணங்களை ஆன்மாவிற் பதித்துச் சிவசமமாக்குவதற்குவமை.)

"கரும்பைத் தேனைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியை யொத்திருப்பனந்த முத்தியினிற் கலந்தே."

(இது சிவம் ஆனந்தசொரூபமாய் நிற்றல்.)

திருவிளையாடற் புராணம்.

"மாசறு மணிபோற் பன்னாள் வாசக மாலை சாத்திப்
பூசனை செய்து பன்னாட் புண்ணிய மன்று ளாடு
மீசன தடிக்கீ ழெய்தி யீறிலா வறிவா னந்த
தேசொடு கலந்து நின்றார் சிவனருள் விளக்க வந்தார்."

(இது மாணிக்கவாசக சுவாமிகளடைந்த முத்தி.)

என வரும் பிரமாணங்களால் அறியக்கடவர்.

9. இனி, வேதம் முதனூல் என்றும் ஆகமம் வழிநூலென்றும், வேதம் மூலமென்றும் ஆகமம் அதனுரையென்றும் சைவ சித்தாந்திகள் கொள்ளுநவரென்றார். அவ்வாறு கூறுவோர் யாருமிலர். வேதசிவாகம மிரண்டும் முதனூல்களேயாம். அதனை,

சிவஞானசித்தியார்.

"அருமறை யாகம முதனூல்"

"வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்க
ளாதிநூ லநாதியமலன் றருநூ லிரண்டு
மாரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலாம்
நீதியினா லுலகர்க்குஞ் சத்திநி பாதர்க்கு
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள் வேதாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்."

என்பவற்றா லுணர்க.

வேதம் மூலமும் ஆகமம் உரையுமாமென்று கொள்பவருமிலர். "பொருள் பலபடத் தோன்றுஞ் சூத்திரமும், அதனை அவ்வாறாக வொட்டாது தெளித்துரைக்கும் பாடியமும்போல முறையே வேதமும், சிவாகமும் செய்யப்பட்டன" என்பர் பெரியோர். இவர் போல என உவமையாகக் கூறுவதை யோர்ந்திலர்.

10. ஆனந்த நடராச வள்ளலார் பெற்றான் சாம்பானுக்குத் திருமுகமளித்தபொழுது எவ்வடிவமாகத் தோன்றினாரென்கின்றார். சுந்தரமூர்த்தி நாயனாருக்கு எவ்வாறு தோன்றி வல்வழக்கிட்டார்; மாணிக்கவாசக சுவாமிகளுக்கு எவ்வாறு தோன்றி ஞானோபதேசஞ் செய்தார்; மற்றை நாயன்மார்களுக்கு அவ்வப்பொழுது தோன்றியது எவ்வாறு; அவ்லாறே பெற்றான் சாம்பானுக்கும் பிரசன்னமாயினரென்று உணரக்கடவர். அதுபற்றி இன்னும் சில குழறினர். அவை பயனிலவாதலின் நோக்காது ஒதுக்கினாம்.

11. இனி, "உயிர்நீங்கிய உடம்பைச் சமாதி வைத்தலும், ஆலயஞ் செய்வித்தலும், பூஜையாதிகள் நடத்திவைத்தலும் அநியாயமென்று" கூறினாரென்கின்றார். அது செய்யலா மென்பதற்குத் திருமந்திரத்தில்,

"ஆதன மீதி லாசு சிவலிங்கம்
போது மிரண்டினி லொன்றைத் தாபித்து
மேதகு சந்நிதி மேவுத்தரம் பூர்வம்
காதலற் சோடசங் காணுபசாரமே."

என ஞானி பரிபூரண மடைந்தகாலத்து அவரது திருமேனிக்குச் செய்யுஞ் சமாதிக்கிரியையை விதித்த பிரமாணத்தை எடுத்துக் காட்டினார்; திருமூலர் ஞானியென்றது சிவஞானியை. அது,

திருமந்திரம்.

"ஞானத்தி னற்பத நண்ணுஞ் சிவஞானி
தானத்தால் வைத்த தனியால யத்தனு
மோனத்த னாதலின் முத்தனுஞ் சித்தனு
மேனைத் தவசி யிவனென லாகுமே."

என்பதனால் விளங்கும். அங்ஙனமாக, உண்மையாகிய சிவஞானிக்குச் சொல்லப்பட்ட சமாதியைச் சிவஞானியல்லாதார்க்கும் இக்காலத்துச் செய்கின்றனர். வேடம் பூண்டதனால் ஒருவர் ஞானியாகமாட்டார். அந்தப் பொய்வேடதாரிகளை,

"ஆடம்ப ரங்கொண் டடிசிலுண் டான்பயன்
வேடங்கள் கொண்டு வெருட்டிடும் பேதைகா
ளாடியும் பாடியு மழுதும ரற்றியுந்
தேடியுங் காணீர் சிவனவன் றாள்களே."

"ஞானமி லார்வேடம் பூண்டிந்த நாட்டிடை
யீனம தேசெய் திரந்துண் டிருப்பினு
மான நலங்கெடு மம்புவி யாதலா
லீனவர் வேடங் கழிப்பித்த லின்பமே."

"இழிகுலத் தோர்வேடம் பூண்பர் மேலெய்த
வழிகுலத் தோர்வேடம் பூண்பர் தேவாகப்
பழிகுலத் தாகிய பாழ்சண்ட ராளர்
கழிகுலத் தோர்கள் களையப்பட் டோரே."

"பொய்த்தவஞ் செய்வார் புகுவார் நரகத்து"

"பொய்வேடம் பூண்பர் பொசித்தற் பயனாக"

என்று திருமூலநாயனாரே இகழ்கின்றார். இக்காலத்துச் சிவஞானிகள் அகப்படுதல் அரிதாம். பொய்வேடதாரிகளே மிகுத்துவிட்டனர். இந்த வயிற்றுச் சோற்று வேடதாரிகளெல்லாம் சிவஞா

னிகளாவரா? அவர்களது உயிர்நீங்கிய உடலைச் சமாதிவைத்து ஆலயங்கட்டி வழிபடலாமா? அன்றியும் இவர்குழுவினர் மாயா வாதம் பேசுபவர். இந்த மாயாவாத ஞானிகள் சிவஞானிகளா கார். மலபரிபாகம் இருவினையொப்பு சத்திநிபாதம் எய்திக் குரு வருளாகிய சிவதீக்கை பெற்றுச் சரியை கிரியை யோகம் ஞானம் உடையவராய் விளங்குபவரே சிவஞானிகள். அவருக்காக நாய னார் சொன்ன சமாதிக் கிரியைக்கும் மாயாவாதிகளுக்கும் என்ன சம்பந்தம்.

12. இவர்கள் தங்களுக்குக் குருவென்று சொல்வது சங்க ராசாரியரை. அந்தச் சங்கராசாரிய மடத்தார் பிராமணர். அவர் கள் பிராமணரொழிந்த மற்றை வருணத்தாருக்கு வேதமில்லை, ஞானமில்லை, உபதேசமில்லை, பிரமசரியம் கிரகஸ்தம் வானப்பிரஸ் தம் சந்நியாசமாகிய ஆச்சிரமங்களில்லை, மோக்ஷமில்லை, இறந்தபின் சந்நியாசிகளுக்குச் செய்யும் எச்செயலும் மற்றை வருணத்தார்க் கில்லை. எல்லாம் பிராமணர்க்கே யுரியன என்பவர். ஆதலால், இவர்களைச் சீடராக அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அன் றியும், இக்காலத்துச் சிலர், மேலெழுந்தவாறு ஒரு சாத்திரப் பிர மாணமும் சமயப் பிரமாணமுமின்றித் தாங் தாம் நினைந்தவாறே ஒரு சம்ஸ்காரமு மின்றிக், கல்லாடைபூண்டு முண்டிதமிட்டு நீறு பூசிச் சந்நியாசிகளாகிவிடுகின்றனர். இப்படியாதல் எந்த வேத விதி. எந்த ஸ்மிருதி யநுசாரம்.

வைதிகமென்றால் வேதமுறைப்படி நடத்தல் வேண்டும். ஸ்மார்த்தமானால் ஸ்மிருதிவழி யொழுகல் வேண்டும். வைணவ மானால் பாஞ்சராத்திரப்படி நடத்தல் வேண்டும். சைவமானால் சிவாகம விதிப்படி நடத்தல் வேண்டும். எல்லாரும் அவரவர் விதிப்படி நடக்கின்றனர். இக்காலத்து வேதாந்திகளெனப் புறப் பட்டாரிற் சிலர் ஒன்றிலேனும் அமைந்தவராகக் காணப்படவில்லை. வியாசர் இயற்றிய பிரமசூத்திரம் வேதத்துள்ள கர்மகாண்ட விதிப் படி நடந்து பரிபாகமடைந்தவனுக்கு அதன்மேல் இந்த ஞான விசாரம் உரியதாமென்று அதிகாரியை நிர்ணயம் பண்ணுகின்றது. இவர்கள் அவ்விதியை உல்லங்கனஞ்செய்து எடுத்தவுடனே வேதா ந்திகளாகிவிடுகின்றனர். பிராமணர், சைவர், விதிக்கப்பட்ட

முறைப்படி சந்நியாசம் பெறுகின்றனர். இவர்கள் அப்படிப்பெறு கின்றார்களா. சந்நியாசிகளுக்கு விதித்த விதிப்படி நித்தியகர்மங் கள் செய்கின்றார்களா. பெற்றதுமில்லை. அநுட்டித்ததுமில்லை. பயனும் அப்படியேயாமென்று சொன்னால் அது தூஷணமாகுமா? இவர்க்கும் திருமூலர் சொல்லிய சைவசமாதிக் கிரியைக்கும் என்ன சம்பந்தம். சமாதிக் கிரியை எந்தநூற்படி செய்வது. சிவ லிங்கந் தாபிக்கும் விதியெது. பூசித்துச் சோடசோபசாரஞ் செய்தற்கு மந்திரம் கிரியை பாவனை வேண்டுமே. எந்த நூலின் படி செய்வது. சைவர் ஆகமவிதிப்படி செய்வர். இவருக்கு அது கூடுமா? ஆகமவிதிப்படி தீக்ஷை அநுஷ்டானம் பூசை யோகம் ஞானம் இருந்தாலன்றோ சமாதிக்கிரியை ஆகமவிதிப்படி செய்யத் தகும்.

வைதிகத்தில் அல்லது இவரது மாயாவாத நூல்களில் இவை விதிக்கப்பட்டிருக்கின்றனவா. அவ்விதிகளி லொன்றுபற்றிச் செய் கின்றனரா. பிரஸ்தாபம் வரும்பொழுது உண்மையைப்பேசுதல் குற்றமாகமாட்டாது. இதைக்கண்டு விடைசொல்லித் தப்பமுடி யாமல் வாயில் வந்தவாறு பேசி எழுதித் தூஷணைகளையே அள்ளி யெறிதல், இழிமொழி பேசுதல் என்பன நல்லோர் செயலாக மாட்டா. உண்மையை நினைந்து ஏதேனுமொரு சமய சாஸ்திர வரம்பில் அமைந்துநின்று பயன்பெற முயலல் வேண்டும்.

13. இனி, நாயனார் சிவஞானியைச் சமாதிவைத்து அரசை யேனும் சிவலிங்கத்தையேனும் வைத்தல் வேண்டுமென்றனரே யன்றி, நந்தி பலிபீடம் பரிவாரம் துஜஸ்தம்பம் தூபி பிராகாரம் கர்ப்பக்கிரகம் அர்த்தமண்டபம் மகாமண்டபம் ஸ்நபன மண்டபம் தம்பமண்டபம் நிருத்த மண்டபம் கோபுரம் முதலியவை யெல்லாம் இயற்றி ஆலயமாகக் கட்டும்படி சொல்லியிருக்கின்றனரா? சிவலிங்க மென்றது அவ்வியக்தலிங்கமா? வியக்தாவ்வியக்தலிங்கமா? வியக்த லிங்கமா? திருவாடுதுறையிலே திருமூலநாயனாரது சமாதியிலே வியக்தலிங்கம் வைக்கப்பட்டிருக்கிறது. மெய்கண்டதேவர், உமாபதி சிவாசாரியார், திருமாளிகைத் தேவர், நமச்சிவாய மூர்த்திகள் சமா திகளிலெல்லாம் வியக்தலிங்கங்களே வைக்கப்பட் டிருக்கின்றன. இவை யெல்லாம் சைவ விதிப்படி செய்யப்பட்ட சமாதிகள்.

மாயாவாதிகள் இம்முறை பற்றித்தானே செய்கின்றனர்? திருமூலர் சமாதியிலேயே வியக்தலிங்கம் ஸ்தாபிக்கப் பெற்றிருக்குமானால் நாம் செய்யவேண்டுவது எப்படி? அவர் விதித்தது எந்தலிங்கத்தை? அறிவுடையோர் இதனை யோசிக்கக்கடவர். இதுவே இப்படியிருக்க, மாயாவாதிகள் தமக்கு ஒருவகையிலுஞ் சம்பந்தப் படாத ஆலயங்களை உயிர் நீங்கிய உடம்புக்குக் கட்டுதல் எவ்வாறு பொருந்தும்? உள்ளவாறே சமாதி யுற்றவர்க்கன்றி இறந்தவருக்கும் சமாதி விதிக்கப்பட்டிருக்கிறதா. சமாதியுற்றவர்க்குச் சாமதியா? காவி கட்டினவர்க்கெல்லாஞ் சமாதியா?

மாயாவாதிகள் சங்கரமதத்தவர் செய்யுஞ் சமாதி முறையை அநுசரிக்காததென்னை? அநுட்டிப்பது சங்கரமதம்; இறந்தபின் செய்வது சைவ முறையோ. இவர் சைவ முறைப்படியேனுஞ் செய்கின்றனரா. ஒரு கிரியையும் பிரதிஷ்டையுமில்லாமல் வெறும் சிலையினாலாய இலிங்கவடிவை வைத்தால் அது சிவலிங்கப் பிரதிஷ்டையாகிவிடுமா? இன்னும், கோவிலூரிலே ஆண்டவர் என்பவருக்குச் சிவலிங்கமும், துறவு சுவாமிகளென்பவருக்கு நந்தியும், சிதம்பரய்யா என்பவருக்குப் பலிபீடமும் வைக்கப்பட்டிருக்கின்றனவே. இப்படி மூன்றினும் மூன்றுவிதமாய் வைத்ததற்கு நியாயமென்னை?விதியென்னை? இனித்துஜஸ்தம்பம் ஒன்றுதான் குறைபோலும்! அதற்குயாரைப் பார்த்திருக்கிறார்களோ! திருமூலநாயனார் "அரசுசிவலிங்கம்" என்றனரேயன்றி "நந்தி பலிபீடம்" என்று சொல்லவில்லையே. "அரசுசிவலிங்கம் நந்தி பலிபீடம்" என்று இவர் புதிதாய் ஒரு பாட்டுப் பாடுவாரோ!

திருமூல நாயனர், பதி பசு பாசவேறின்மை.

"ஆய பதிதா னருட்சிவ லிங்கமா
மாய பசுவு மடலே றெனநிற்கு
மாய பலிபீட மாகுநற் பாசமா
மாய வரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே."

எனச் சிவலிங்கத்தைப் பதியென்றும், நந்தியைப் பசுவென்றும், பலிபீடத்தைப் பாசமென்றும் கூறியிருக்கிறார். இவ்வாறே காரணாகமம் மகோற்சவ விதிப்படலத்தினும், பதஞ்சலி முனிவர் சிதம்பராலய சம்பந்தமாய்ச் செய்த சூத்திரத்தினுஞ் சொல்லப்பட்

டிருக்கிறது. திருமந்திரமும் ஆகமமும் பதஞ்சலி சூத்திரமும் இவர்களுக்குப் பிரமாணமாமன்றே. அம்முறைப்படி பார்க்கின், ஆண்டவர் பதியா? துறவுசுவாமிகள்பசுவா? சிதம்பரய்யா பாசமா? இவர்கள் மூவரும் பதி பசு பாசமாவதற்கு நியாயமென்னே? அல்லது, இவர்களை இப்படியாக்குவதற்கு விதி யென்னே? இவை யொன்றையுங் கருதவில்லை, உத்தேசமாய் மூன்றையும் வைத்தார்களென்னில், அதில் யாதொரு கேள்வியுமில்லை. என்னே? இவர்கள் செய்வன வெல்லாம் பயனில்லாதனவே யாகலினென்க. ஏதேனுமொரு மதம் பற்றி, அல்லது, ஒரு நூன்முறைபற்றி, ஒரு விதிபற்றிச் செய்தாலன்றோ குற்றமுங் குணமும் பார்க்கலாம். அதுவுமில்லை, இதுவுமில்லை யென்பதே விடையாம். இவர் கூறிய சமாதியினழகு இப்படியாயிற்று! அம்மூவர்க்கும் பின் வந்தோரு க்கு அவை தாமும் இல்லை. அது என்ன உத்தேசமோ. எதைச் சரி யென்போம்! எதைப்பிழையென்போம்! காசிகானந்தருக்கு வாய்ப்பேச்சுமாத்திரம் வெகு ஆடம்பரமாயிருக்கிறது. காரியத்தில் ஒன்றையுங்காணோம்! பதி பசு பாசம் நித்த மன்றென்போர் ஈற்றில் பதி பசு பாசம் மூன்றும் நித்தமாமெனச் சமாதிநிலையிற் சாதித்து விட்டனரே! நானு மறியேன் அவளும் பொய் சொல் லாள் என்றபடி நடந்து விட்டது போலும்!

14. மேல் அவர் சிவலிங்கம் வைத்துப் பிரதிஷ்டைசெய்யப் பெற்ற ஆலயங்களினும் தம் மாயாவாதிகள் உடல் வைத்த சமாதி கள் உயர்வுடையனவாமென்றார். ஆகமங்களையும் அதன் கிரியை களையும் சிவஞானத்தையும் நிந்திக்கின்ற இவரன்னோர், சிவனை யும் சிவலிங்கத்தையும் சிவாலயத்தையும் இழிவுபடுத்திப்பேசுவது ஒரு புதுமையோ? ஒரு மதத்தினுங் கட்டுப்படாத இவர்கள் யாது தான் செய்யமாட்டார்கள்.

15. பரமேசுவரன் ஞானிகளது பாததூளி கிடைக்க வேண் டிப் பின்னே திரிவனென்றும், மகேசுரன் ஞானிக்குச் சமல்ல வென்றும், ஞானிக்குப் பரமேசுரன், மகேசுவரன் சதா சிவன் முத லியோர் சமமாகாமல் அவரது ஏவற் பணிக்குக்காத்திருப்பர் என் றும் கரைகின்றார். இது மிக்க சிவ தூஷணமாம். ஞானிகளென்பார் பரசிவனது திருவருள் லேசத்தைப் பெற்று அவரது பர்தாமரை

களையே சிந்தித்துத் துதித்து வணங்கி அப்பாததாமரைகளினின்று பெருக்கெடுத்தோடும் ஆனந்தமாகிய தேனையுண்டு களித்துமெய் யன்போடு திரிவர்.

மாணிக்கவாசக சுவாமிகள்.

“நெக்குநெக் குள்ளுருகியுருகி நின்றுமிருந்துங் கிடந்துமெழுந்து
நக்குமழுதுந் தொழுதும்வாழ்த்தி நானாவிதத்தாற் கூத்துநவிற்றிச்
செக்காபோலுந் திருமேனி திகழநோக்கிச் சிலிர்சிலிர்த்துப்
புக்குநிற்ப தென்றுகொல்லோவென் பொல்லாமணியைப் புணர்ந்தே.”

“அம்மையே யப்பா வொப்பிலாமணியே
யன்பினில்விளைந்த வாரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச்சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன்றனக்குச்
செம்மையேயாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
யிம்மையே யுன்னைச் சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவ தினியே.”

“பானினைந் தூட்டுந் தாயினுஞ்சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
வூனினையுருக்கி யுள்ளொளிபெருக்கி
யுலப்பிலா வானந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.”

“சீலமின்றி நோன்பின்றிச் செறிவேயின்றி யறிவின்றித்
தோலின்பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்றுவிழுந்து கிடப்பேனை
மாலுங்காட்டி வழிகாட்டி வாராவுலக நெறியேறக்
கோலங்காட்டி யாண்டானைக் கொடியேனென்றோ கூடுவதே.”

திருவிசைப்பா.

“என்னையுன்பாத பங்கயம்பணிவித்
தென்பெலா முருகநீயெளிவந்
தன்னையேயென்பால் வைத்தெங்குமெஞ்ஞான்று
மொழிவற நிறைந்தவொண்சுடரே

முன்னை யென்பாவ முழுவது மகல
முகத்தலை யகத்தமர் தெனக்கே
கன்னலும் பாலுந் தேனுமா ரமுதங்
கனியுமா யினியையா யினையே.''
பட்டினத்தடிகள்.

"பூதமுங்கரணம் பொறிகளோம் புலனும் பொருந்திய குணங்களோர் மூன்றும், நாதமுங்கடந்த வெளியிலே நீயுநானுமாய் நிற்குநாளு ளதோ, வாதமுஞ்சமய பேதமுங்கடந்த மனோலயவின்பசாகரனே, ஏதுமொன் றறியேன் யாதுநின் செயலே யிறைவனே யேகநாய கனே''

இப்படியே அடியாரெல்லாம் அழுதுந்தொழுதும் ஆடியும் பாடியும் விழிநீர்பெருக்கி யழலிலிடைப்பட்ட மெழுகேபோல் அகங் குழைந்துருகி அன்புசெய்து ஆனந்தமாகியிருப்பாராக, இப்பேதை நீரார் தம் மகம்பிரமமாயாவாத வேதாந்தத்தடிப்பினால், எள்ளள வேனும் அன்பின்றி அச்சமுமன்றி அப்பரமசிவனை இழித்துக் கூறினர். அந்தோ, இவ்வதிபாதக சிவநிந்தைக்கு மாற்றுமருந்தும் உண்டாங்கொல்! இச்சிவநிந்தையைக் கேட்கினும் அதிபாதகமாமே! பாமவமே! இவரும் திருநீறு புனைந்து சைவப்போர்வையில் வைகிச் சிவாலயங் கட்டுகிறோமென்றும் சிவாலயங்களை வழிபடுகிறோ மென்றும் உலவுகின்றனரே. அது.

"வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்து மேய்ந்தற்று''

என்னுங்குறட்படி போலும்.

இவர் "நாமே பிரமம், பிரகிருதி பொய், அப்பிரகிருதியின் சத் துவகுண மாயா பிரதிபிம்பனாயுள்ளவன் ஈசுவரன். பிரமமாகிய நம் மில் அவ்வீசுவரன் தாழ்ந்தவன். பிரமமாகிய நம்மைத்தவிர ஈசுர னும் சீவர்களும் உலகமுமாகிய எல்லாம் பொய். வெறும்பொய்'' என்பவராதலின், அப்பரமேசுரனிடத்தே அன்புண்டாக இடமில்லை. அதுபற்றியே இப்படித்துணிந்துரைக்க நேர்ந்தது. கடவுளையே இல்லையென்போர் எவ்வாறு கொள்ளினுமென், எவ்வாறு கூறினு மென்.

16. அவர் அம்மட்டோடு நில்லாது "இப்பொழுது பிரசித்தியாயுள்ள சிவாலயங்களெல்லாம பிரம ஞானிகளாய மகான்களது சமாதிகளே" என்றும் உரைத்தார். முன்னே பிரம ஞானிகளுக்குச் சமாதி கட்டவேண்டுமென்றார். பின்பு சிவாலயமெல்லாஞ் சமாதியென்கிறார். அப்படியானால் மனிதருக்கே ஆலயமன்றிப் பரமசிவனுக்கு ஆலயமில்லை யென்று ஆகின்றது.

யசுர்வேதத்திலே போதாயன சாகையிலே சிவலிங்கார்ச்சனம் விதிக்கப்பட்டிருக்கிறது. இவர் கொள்கைப்படி அதுவும் மனித சமாதிலிங்கத்தையே போலும். பரமசிவன் அருளிய காமிக முதலிய ஆகமங்கள் ஆன்மார்த்தமாகச் சிவலிங்கார்ச்சனஞ் செய்யுமாறு விதிக்கின்றன. அவை யெல்லாம் சமாதிலிங்கங்களைத் தானோ பூசிக்குமாறு விதித்தன. எட்டுவித சுயம்புலிங்கங்களுக்கு ஆலயம் அமைத்தும், புதிதாகச் சிவலிங்கப்பிரஷ்டை செய்து ஆலயமமைத்தும் பூசிக்குமாறு விதித்திருக்கின்றன. அவை யெல்லாம் சமாதிலிங்கங்களைத்தான் விதித்தனவோ. அதுவும் இந்த மாயாவாதிகளுடைய சமாதிகளைத்தானோ. கெட்டி! கெட்டி! இதுவரையில் மற்றவரெல்லாம் பிறந்திறந்துழலுந் தம்மைப் பிரமமென்றனர். இவர் கோவிற்சிவலிங்கமெல்லாம் அதிலும் பிரசித்தமான பெரிய தலங்களிலுள்ளவைகளெல்லாம் தம்மவராகிய மாயாவாத மனிதப்பிரமங்களினது சமாதிகளாமென்கின்றார். இவரது சாமர்த்தியத்தை என்னென்று சொல்லலாம். சிவாகமங்களை இகழ்ந்து திரிகின்ற மாயாவாதப் பிரமங்கள் சிவாகம நிலையமாயுள்ள ஆலயங்களையும் மாயாவாதக் கோவிற்சமாதிகளாக்கிவிட நினைப்பது நல்ல சூழ்ச்சியேயாம். இதன்பொருட்டுத்தான் ஆலயப்பணியும் ஆலய பரிபாலனமும் செய்கின்றோமென்று முயல்கின்றனர்போலும். மெல்லமெல்ல ஆலயங்களைத் தம்வசமாக்கிக்கொண்டு எல்லாவற்றையும் சமாதிகளாக்கி அவ்வழியினாலும் மாயாவாதத்தைப் பரப்பிவிடலாமென்றும், தம்மவர்க்கே ஆக்கந் தேடிக்கொள்ளலாமென்றும் யோசனை செய்தனர்போலும்.

17. இப்படிச் சொல்லிய அவர் தம் சொல்லுக்கு வேதத்திலாவது, வேதாந்தத்திலாவது, ஆகமங்களிலாவது ஸ்மிருதிபுராண இதிகாசமுதலிய பிரமாண நூல்களிலாவது பிரமாணங்காட்டாமல்,

யாதொரு வழியும் இல்லாமையாற்போலும் சித்தர் நூலிலே தடவி யெடுத்து "ஆமப்பா" "கேளப்பா" என்று தொடங்கும் சில பாட்டுக்களைக் காட்டுவாராயினர். சித்தர் நூல் எவ்வளவிற் பிரமாணமாமென்பது யாவர்க்குந்தெரியும். இக்காலத்திலும் குஜிலிக்கடைச் சித்தர்கள் அநேக நூல்களைப்பாடி வெளியிடுகின்றனர். அதிலும் இது போகர் பாடிய நூலாம்.

அப்பாட்டில் "ஆமப்பா அருணகிரிமலையிற் கேளு ஐந்நூறு பேர்கள் சித்தர் அதனில் வாழ்வார்." "கழுக்குன்றி லொன்பது பேர் கூட்டம்" "கால்மலையி லொருநூறுபேர் சித்தர்" என்று சொல்லப்பட்டிருக்கிறதேயன்றி, அருணகிரியில் அண்ணாமலைநாதர் கோவில் சித்தர்சமாதியென்று சொல்லடபடவில்லை. "ஆமென்ற சிதம்பரமே திருமூலராச்சு" "திருக்கூடல் மூலராச்சே" "வானென்ற மலைநாடு நெடுங்குன்றூரில் மகத்தான திருமூலர் வாசமாச்சு" "நாளென்ற மேலச்சிதம்பரத்தில் நாடியது திருமூலர் நாட்டந்தானே." என்றிருக்கின்றன. திருமூலர்சமாதி திருவாவடுதுறையிலே சிவலாயத்து லிங்கத்துக்கு வேறாகவிருத்தல் பிரத்தியக்ஷமாம். அப்படியிருக்க இவர் திருமூலர்சமாதி சிதம்பரமென்கின்றார். நெடுங்குன்றூர் என்கின்றார். மேலச்சிதம்பரமென்கின்றார். இந்நான்கனுள் எது திருமூலர்சமாதி? வாசம் வாசம் என்பதையெல்லாம் இவர் சமாதி யென்கின்றார்.

சிதம்பரம் திருமூலர் சமாதி யென்றனரே. திருமூலர் அச்சிதம்பரத்தைத் தாம் அருளிய திருமந்திரத்திலே பலவாறு துதித்திருக்கின்றார். அதுவருமாறு:—

"எங்குஞ்சிதம்பரமெங்குந்திருநட்டம்" "பொற்றில்லைக் கூத்தனை" "அடியார் பொன்னம்பலக்கூத்தாடல் கண்டாரே" "செம்பொற்றிருமன்றுட் சேவகக்கூத்தனே" "வண்டில்லைக்கூத்தனை" "செம்மை சிறந்த திருவம்பலக்கூத்து."

"மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூடு மிவ்வானி லிலங்கைக் குறியுறுஞ்
சாருந் திலைவனத் தண்மா மலயத்தூ
டேறுஞ் சுழுனை யிவைசிவ பூமியே."

"திருவம்பலத்துளே, வேறின்றியண்ணல் விளங்கி நின்றனே"
"அரதன மன்றினின் மாணிக்கக் கூத்தன்"

இவ்வாறு திருமூலர் காலத்துக்கு எத்தனையோ கற்பங்களுக்கு முன்னரே விளங்குவதாய், அதாவது சிருட்டியிலேயே சுயம்புவாயமைந்த சிதம்பரத்தைத், திருமூலரும் வழிபட்டுத் தோத்திரஞ் செய்வாராக, இந்த மாயாவாதியார் பெரும் புரட்டுப் புரட்டிச் சிதம்பரம் திருமூலர் சமாதி யென்கின்றார்.

அருணகிரி:—அயனுமரியுந்தேடி அடிமுடிகாணுதயர்ந்த சோதிலிங்கமாகும். அதனையுஞ் சித்தர் சமாதி யென்கின்றார். திருவாரூர் பிருதிவிலிங்கம். திருவானைக்கா அப்புலிங்கம். திருவண்ணமலைதேயுலிங்கம். திருக்காளத்தி வாயுலிங்கம். சிதம்பரம் ஆகாசலிங்கம். இவை யெல்லாம் ஒருவராற் பிரதிட்டை செய்யப் பெற்றனவல்ல. பரமசிவனே உயிர்கள்உய்யும் பொருட்டுஅவ்வத்தலமாயும், அங்குள்ள மூர்த்திகளாயும், அங்குள்ள தீர்த்தங்களாயும் அமைந்திருந்தனரென்று நூல்கள் கூறுகின்றன. அங்ஙனமாக, அவை யெல்லாஞ் சித்தர்கள் சமாதி யென்று இம்மாயவாதியார் சொன்னல், இவரைப் பித்தம்பிடித்தவரென்பரேயன்றி இவருரையை ஏற்றுக்கொள்வார்களா?

சிதம்பரம்:—தகரோபாஸ்தி தருந்தலம். தகாவித்தை சாந்தோக்கியம் தைத்திரியம் முதலிய சுருதிகளிலே விதிக்கப்பட்டது. கைவல்யோபநிடதத்திலே தகரோபாசனை செய்யுமுறை சொல்லப்பட்டது. பரமசிவன் உலகத்திலே தகரோபாஸ்திதருந் தலமாகத் தில்லை வனத்தில் இச்சிதம்பரத்தை அமைத்தார். சிருட்டிதொட்டு அத்தலத்திலே தகரவித்தையாகிய ஆனந்ததாண்டவம் அநவரதமும் நடக்கின்றது. பதஞ்சலி வியாக்கிரபாதர் அருந்தவஞ்செய்து அந்த நடனத்தைத் தரிசித்தனர். பதஞ்சலிமுனிவர் மகுடமுதலிய ஆகமங்களிலே சிதம்பர பூசாவிதியை யறிந்து தாம்பூசித்து, அம்முறையைப் பதஞ்சலி சூத்திரமென அருளிச்செய்தார். அவ்வாகம முறைப்படி தில்லைவாழந்தணர் பூசித்து வருகின்றனர். இவர் அவ்வுண்மைகளை யோராது சிதம்பரம் திருமூலர் சமாதியாமென்றது மாயாவாத மயக்கமாம்.

திருக்கழுக்குன்றம்:—இதில் வேதங்கள் மலையுருவாயமைய வேதத்துள்ளுறை பொருளாகிய பரமசிவன் சுயம்புலிங்கவடிவா யெழுந்தருளினர். திருமால், பசு, வராகம், கோடி யுருத்திரர், சண்டன் பிரசண்டனாகிய கழுகரசர், சம்பாதி சடாயுவாகிய கழுகரசர் பூசித்து அருள் பெற்றனர். இதனை ஒன்பது சித்தர் சமாதியென்றார்.

காஞ்சீபுரம்:—இது உமாதேவியார் கம்பையாற்றங்கரையில் மணலாற் சிவலிங்கம் பாணித்துப் பூசித்ததலம். அம்மையார் பூசித்த லிங்கமே இங்குள்ளது. இதனைக் காலாங்கி நாதர் சமாதியென்றார்.

கும்பகோணம்:—இது சிருட்டியாரம்பத்தில் பிரமனமைத்த கும்பத்திருந்த அமுதத்தால் ஒரு சிவலிங்கமியற்றி, உருத்திர மூர்த்தி வேடவடிவோடிருந்து பூசித்ததலம். இதனைக்கும்பமுனிசாமதியென்றார்.

மாயூரம்:—இது உமாதேவியார் மயில் வடிவங்கொண்டு சிவலிங்கந்தாபித்துப் பூசித்து வழிபட்டு அருள்பெற்ற தலம். இதனை மச்சமுனி சமாதியென்றார்.

சீகாழி:—பிரமா பூசித்த சிவலிங்கம் இங்குள்ளது. விஷ்ணு, இந்திரனாதியோரும் பூசித்து அருள் பெற்றனர். நரசிம்மத்தின் உக்கிர நிலையையடக்கிய சரபேசுரர் பின்பு சட்டைநாத வடிவாயிருந்து அநுக்கிரகித்த மூர்த்தமும் இங்குளது. இதனைச் சட்டமுனி சமாதி யென்றனர்.

நாகபட்டினம்:—புண்டரீக மகாரிஷி பூசித்த ஆதி புராணேசுவரராகிய சிவலிங்கம் அமையப்பெற்றதலம். அகத்தியர், பிரமா, இயமன், விஷ்ணு, விசுவாமித்திரர் முதலாயினோர் பூசித்து அருள் பெற்றனர். இதனை அழுகண்ணிச்சித்தர் சமாதியென்றார்.

திருவிடைமருதூர்:—உருத்திரர் பூசித்த சிவலிங்கம் இங்குளது. உமாதேவியார், விநாயகர், சுப்பிரமணியர், பிரமா, விஷ்ணு, சரஸ்வதி, இந்திரன், துவாதசாதித்தர், சந்திரன், வேதங்கள், வசிஷ்டர், அகத்தியர், முப்பத்து முக்கோடி தேவர், அஷ்டமா நாகங்கள் ஆதியோர் பூசித்து அருள் பெற்றனர். இதனை இடைக்காடர் சமாதி யென்றார்.

மதுரை:—"முன்னரிக் கடம்பின்மா டே முளைத்ததிச் சைவ லிங்கம்" "ஒப்பரிதான ஞான வொளியிரண் டானவிந்தத் திப்பிய லிங்க மூல லிங்கமாய்ச் சிறக்குமன்னே" என்னுந்திருவிளையாடற் படி, சுயம்பு மூர்த்தியா யெழுந்த சிவலிங்கம் இங்குளது, இதனைச் சுந்தர சித்தர் சமாதி யென்றார்.

வைத்தீசுரன்கோவில்:—இது புள்ளிருக்கும் வேளூர் எனவு ம்படும். சம்பாதி சடாயு பூசித்த சிவலிங்கமுள்ளது. சூரியன், வேதம், சுப்பிரமணியக்கடவுள், இராமன், இலக்குமணன், தேவே ந்திரன் முதலியோரும் பூசித்திருக்கின்றனர். இதை வதிஷ்டர் சமாதி யென்கின்றார்.

திருக்காளத்தி:—இது தெக்ஷிண கயிலாயம் எனப்படும். இங் குள்ள லிங்கம் சுயம்புலிங்கம். முன்னே கயிலையில் வாயுவினாலே பூசிக்கப்பெற்றது. பின் பிரமதேவன் கயிலாயத்திருந்த அச்சிக ரத்தை இவ்விலிங்கத்தோடு கொண்டுவந்து இங்கே தாபித்துப் பூசித்தான். பின்பு சிலந்தியும் காளமும் அத்தியும் பூசித்து அருள்பெற்றன. கண்ணப்பர் பூசித்து அருள் பெற்றதும் இவ்வி லிங்கத்தையே. இதைக் கருவூரார் சமாதி யென்கின்றார்.

காசி:—அவிமுக்தஜாபாலம் என்னும் உபநிடதத்திலே புருவ நடுவிடமாகிய வாரணாசியில் தாரக வித்தை செய்யுமுறைசொல்லப் பட்டது. இத்தலம் அத்தாரக வித்தைக்குரிய தலமாம். அதனால் இது வாரணாசி யெனப்படும். இங்குள்ள லிங்கம் அவிமுக்தேசுரர் எனப்படும் சுயம்புலிங்கமாம். விசுவநாதர் எனவும் படும். இதை விஸ்வாமித்திரர் சமாதி யென்றார்.

திருவையாறு:—தருமதேவனைத் பூசித்து வழிபட்ட சிவலிங் கம். செம்பொற் சோதிநாதர் என்னும் பெயருள்ளது. தரும தேவதை பூசித்துத் திருநந்தி தேவராகிய பெரும்பதம் பெற்றது இத்தலத்திலேயாம். இதை அகப்பேய்ச்சித்தர் சமாதி யென்றார்.

திருப்பெருந்துறை:—இது பராசரமுனிவராலே பூசிக்கப்பட்ட ஆத்மநாதேச்சுரர் இருக்குந் தலம். பிருகுமுனிவரும் பூசித்துப் பேறுபெற்றனர். மாணிக்கவாசக சுவாமிகளுக்கு ஞானோபதே சஞ் செய்ததலமும் இதுவேயாம், இதனைப்புலத்தியர் சமாதி யென்றார்.

திருக்கடவூர்:—மார்க்கண்டேய முனிவர் இயமனை வெல்லும் பொருட்டுத்தாபித்துப் பூசித்த அமுதகடேசுரர் என்னுஞ் சிவலிங்கம் இருக்குந் தலம். இதைக் காலாங்கி நாதர் சமாதி யென்றார்.

திருக்கோவலூர்:—இது அட்டவீரட்டங்களுள்ஒன்று. அந்தகனைக் காலபைரவர் சங்கரித்துச் சிவ பூசைசெய்த சிவலிங்கம் இங்குளது.

திருவாவடுதுறை:—இந்திரன் தாபித்துப் பூசித்த சிவலிங்கம். மாசிலாமணியீச்சுரர் எனப்படும். திருமூலர் சமாதி வேறிருக்கின்றது. இதை விசுவாமித்திரர் சமாதி யென்றார்.

திருப்பனந்தாள்:—தாடகை யென்னும் அம்மையார் பூசித்த சடையப்பநாதேச்சுரர் என்னுஞ் சிவலிங்கமுள்ள தலம் இதை வரருசி சமாதி யென்றார்.

திருவானைக்கா:—சம்புமுனிவர்பொருட்டு வெண்ணாவல் மரத்தினடியில் சுயம்புமூர்த்தியாக வெழுந்த சிவலிங்கம். சிலந்தியும் யானையும் பூசித்து வழிபட்ட மூர்த்தி. இதை மச்சமுனி சமாதி யென்றார்.

இங்ஙனம் இவர் எல்லாவற்றையுஞ் சித்தர் சமாதியென்றது பெரும் பேதைமையாம். வேதங்கள் ஆகமங்கள் புராணங்களிலே சொல்லப்படும் பிரமாணங்களினும் சித்தர்பாடல் பெரும்பிரமாணமென இவர் எடுத்தெழுதியது யாதினாலோ. இன்னும், அவர் கோவிலூரைப்பற்றி ஒன்றும் எழுதவில்லை. அதுவும் திருக்களரும் யாருடைய சமாதியென்பதனையும் எழுதுவாராக.

18. இனி, மாயாவாதிகள் "சீவனும் பொய் ஈசுவரனும் பொய்யென்று சொல்லுகிறார்கள்" என எழுதியதைப்பற்றிச் சில நியாயம் பேசினர்.

பிரமம் பிரகிருதியிற் பிரதிபிம்பிக்கு மென்பது இவர் மதம். பிரமம் உருவமன்று. அருவுருவுமன்று. அருவமுமன்று. இம்மூன்று நிலைக்கும் அப்பாற்பட்ட சேதனவஸ்து. பிரகிருதி அருவப்பொருள். தன்னிலிருந்து அருவமும அருவுருவமும் உருவமுமான தத்துவங்களைத் தோற்றுவிப்பது. அருவமான பிரகிருதியில்

ஒன்றுமில்லாத பிரமம் எவ்வாறு பிரதிபிம்பிக்கும். உருவப் பொருள் இரண்டற்கே பிரதிபிம்ப நிகழ்ச்சி கூடும். முகம் உருவப் பொருள். கண்ணாடி உருவப்பொருள். அவ்விரண்டற்கும் உருவ சம்பந்த மிருத்தலால் கண்ணாடியில் முகம் பிரதிபிம்பிக்கலாம். இன்னும், சந்திரன் உருவப்பொருள். கடசலம் உருவப்பொருள். சந்திரனது பிரதிபிம்பம் கடசலத்திற்றோன்றலாம். ஒரு சந்திரனது பிரதிபிம்பம் அநேக ஆயிர கடசலத்திற் றோன்றலாம். அன்றியும், கண்டப் பொருள்களுக்கே பிரதிபிம்ப நிகழ்ச்சியுண்டாம். அங்ஙனமாக, மாயாவாதிகள் மாயையிலும் அவித்தையிலும்பிரமம் பிரதிபிம்பிக்குமென்றும், அப்பிரதிபிம்பங்களே ஈசுரனும் சீவர்களுமென்றுங்கூறுவது எவ்வாறு பொருந்தும்? பிரமம் சித்துப்பொருள். மாயை சடப்பொருள். சடமாகிய மாயையிலே சித்தாகிய பிரமம் பிரதிபிம்பிப்பது எப்படி?

அன்றி, மாயையே பொய். அதிற் பிரதிபிம்ப நிகழ்ந்ததும் பொய். அவித்தை பொய். அதிற் பிரதிபிம்ப நிகழ்ந்ததும் பொய். யாதொன்றும் இல்லையென்பது அவர் மதமேயன்றோ. அவித்தையென்ப தொன்றிருந்தன்றோ அந்தக்கரண ஆபாசமாகிய விசேஷணமுண்டாம். அதில் கூடஸ்த சேதனமாகிய விசேஷியம் பொருளாய் நிற்கும். கூடஸ்த நிகழ்ச்சி மெய்யா, பொய்யா. ஒன்று மெய்யானால் மற்றதும் மெய்யாகும். விசேஷியம் மெய்யானால் விசேஷணமும் மெய்யாம். ஈசுவரன் என்னும் சொற்கு மாயை பிரதிபிம்பங்களாய விசேஷணமும் பிரமசேதனமாய விசேஷியமும் ஆகிய விசிட்டம் பொருளாம் என்றார். மாயை உள் பொருளா. பிரதிபிம்ப நிகழ்ச்சி உண்மையா. அப்படியானாலன்றோ ஈசவரன் மெய்யாப்; பிரமசேதனமான விசேஷியம் மெய்யாம். விசேஷியம் மெய்யென்பராயின் பிரதிபிம்ப நிகழ்ச்சியும் மாயையும் மெய்யென்றாம். விசேஷணமான அந்தக்கரண ஆபாசமும் பொய், மாயை பிரதிபிம்பமும் பொய்யென்பவர் அவை விசேஷியமான சேதனத்தின்கண் ஔபாதிகமாய்த் தோன்றிப் பரஸ்பரம் விரோத தர்மமுடையனவாய் ஐக்கியமுறுமென்று கூறுவது வெறும் வார்த்தையன்றோ மாயை அவித்தைகள் உள்பொருளாயினன்றோ இத்தனையும் சம்பவிக்கும்.

இன்னும், பிரமம் சந்திரனையொக்கும். மாயை அவித்தைகள் கடசல நிகர்க்கும். ஈசுரன் சீவர்கள் கடசல சந்திரபிரதிபிம்பத்தை யொப்பர். கடசல நிகர்த்த மாயை அவித்தைகள் இல்லாதபோது சந்திரபிரதிபிம்பமு மில்லையாம். ஆகவே மாயையை யில்லையென்பார் சீவேசுரர்களையும் இல்லையென்பவரே யாகின்றார். முயலிற் கோடு இல்லாதபொழுது அக்கோட்டினாலாய சிமிழ் எப்படியுண்டாம். ஆகாயத்தாமரை இல்லாதபொழுது அதனாலாகிய மாலையை மலடிமைந்தன் சூடுவது எப்படி? ஆமைமயிர் இல்லாதபொழுது அதனாலியன்ற கயிறு கொண்டு மலடிமைந்தனைக் கட்டுவதெப்படி?

இன்னும், சந்திரன் கடசல பிரதிபிம்ப சந்திரனைக்கண்டு நான் என்று மயங்கிப், பின்பு ஒருவர் உணர்த்த நான் பிரதிபிம்பமன்று, சந்திரனுமெனத் தெளியவேண்டியதில்லை. பிரதிபிம்ப சந்திரன் நான் சந்திரனென்று நினைத்துக் கடத்தையுடைத்தாலும் சந்திரனோடு கூட அல்லது சந்திரனாக ஆவதில்லை. அதுபோலவே பிரமத்துக்கு ஒருவர் உணர்த்தவேண்டியதுமில்லை. மாயை அவித்தைகள் நீங்கினும் பொய்யாயொழியினும், சீவ ஈசுரர்கள் பிரமத்தோடு ஐக்கியமுற, அல்லது பிரமமாக ஆவதில்லை. அவை சூனியமுறுதலே போந்த மிச்சமாம்.

மேலும், நிரூபாதிக வஸ்துவாய் சச்சிதானந்தமயமாய் ஏகமாய் விளங்கும் பிரமத்தைவிட மாயையென்றொரு பொருளும், அப்பொருளிற் பிரமம் அகப்பட்டு, சத்தியல்பு ஆனந்த நிலை நீங்கிச் சோபாதிக முறுதலும் எப்படிப் பொருந்தும். சோபாதிகனாகும் பொருள் சச்சிதானந்த பிரமமாவதெப்படி? மாயை பொருளன்று சத்தி யெனின், பிரமத்துக்குச் சடகுணம் வருவது எப்படி? பரிக்கிரக சத்தியெனின், மாயை யுள்பொருளாயின்றன்றோ பிரமம் பரிக்கிரகிக்கும். அன்றியும் மாயையையுடைய சத்தன் யார்?

இவற்றை யெல்லாம் நோக்காது மாயையிலே பிரமம் பிரதிபிம்பித்தது, பிரமம் சோபாதிகனாயிற்று, மாயையில் மயங்கிற்று என்பனவாக மொழிந்தால், அவை பொருந்துவதெப்படி? இவர் கூறும் பொருள் மாயையிலே உபாதியடையும் பொருளாயின், அதனைப் பிரமமென்று சொல்லமுடியாது. அப்பொருள் ஒன்று, பூ.

யையொன்று; அறியாமையினுல் மாயையிலே மயங்கிற்று எனல் வேண்டும். எனவே, அதற்கு அறியாமையைச்செய்து நின்றதொன்று; அது ஆணவமலமாம். ஆன்மா ஆணவமல மறைப்பால் அஞ்ஞான முற்றுப் பசுவாகி, மாயையிலே தங்கிப் புருடனுகி, அந்தக் கரணங்களிலே சேர்ந்து சீவனும். ஆன்மா இயல்பில் நிருபாதிகனுயினும் மாயையிலே தோய்ந்து சோபாதிகனுவன் என்று சைவ சித்தாந்த நூல்கள் கூறும். திருமந்திரமும் இப்படியே சொல்லும். பரமசிவன் பகர்ந்த ஆகமங்களும் இவ்வாறே கூறும். மாயாவாதிகளும் இப்படிச்சொல்வார்களானுல் ஒத்துப்போம். போகவே, சைவசித்தாந்திகள்சொல்லும் ஆன்மாவையே மாயாவாதிகள் பிரமமென்று கூறுவர் என விளக்கமாம். அது பற்றியே ஆத்மஞானம், ஆத்மகைவல்லியம், ஆத்மாநுபூதியென மாயாவாதிகள் கூறுவரென்பதும் மெய்யாம். இந்த ஆத்மஞானத்தோடு இவர் நின்றுவிட, சைவசித்தாந்த நூல்கள் ஆன்மாவுக்கு ஆன்மாவாகிய பரமான்மாவாய்ச் சச்சிதானந்த வஸ்துவாய் உள்ள சிவத்தைப் பிரமமென்று எடுத்துக்காட்டித் தன்னையடைந்தார்க்குச் சிவ ஞானத்தை விளைவிக்கும். சிவத்தோடு அத்துவிதமாகக் கலப்பிக்கும். சிவமாந்தன்மைப் பெருவாழ்வினையருளும். இதுவே இவ்விருமதத்துக்கும் உள்ள வேறுபாடாம்.

திருமூலநாயனுர் அருளியவாறு,

“ஆயத்து ணின்ற வறுசம யங்களுங்
காயத்து ணின்ற கடவுளைக் காண்கிலா.”

“ஆறு சமயமுங் கண்டவர் கண்டில
ராறு சமயப் பொருளும் பயனில்லை.”

“சிவமல்ல தில்லை யறையோ சிவமாந்
தவமல்ல தில்லை தலைப்படு வார்க்கிங்
கவமல்ல தில்லை யறுசம யங்கள்
தவமல்ல நந்திதாட் சார்ந்துய்ய நீரே.”

புறச்சமயங்கள் மெய்ச்சமயங்களாகா. மாயாவாதம் புறச்சமயங்களுள்ஒன்று. “சாவிபோம் மற்றச்சமயங்கள் புக்குநின், றூவியருமே யுந்திபற” என்றபடி, பயனற்ற அச்சமயங்களால் நாம் அடைவது ஒன்றுமில்லை.

19. உலகத்துள்ளே புண்ணிய பூமி பரதகண்டமாம். பரத கண்டத்துள்ளும்,

"ஈருன கன்னி குமரியே காவிரி
வேறு நவதீர்த்த மிக்குள்ள வெற்பேழுட்
பேருன வேதா கமமே பிறத்தலான்
மாறுத தென்றிசை வையகஞ் சுத்தமே."

என்றபடி, வேதாகமங்களும் அவைபோதிக்குஞ் சைவசித்தாந்தமும் சிவாலயங்களும் நிலவுவதாயுள்ள இத்தமிழ்நாடு மிக்க புண்ணியமுடைய தேசமாம். சிவனருளிய நூல் வேதசிவாகமம். அதுவே சைவமுதனூல். அதன் மெய்ப்பொருளைப் போதிக்கும் ஆசிரியர் தக்ஷிணாமூர்த்தி. அவரது இடம் கைலைமலை. அவர் திருக்கரத்திருப்பது சிவஞானபோதம். அவர் போதிப்பது அந்நூலே. அவரது மாணாக்கர் திருநந்தி தேவர். அவர் போதித்த சிவஞானபோத முதனூல்வழி வந்தவை சைவசித்தாந்த நூல்கள். தேவார திருவாசகங்கள் சிவாநுபூதியுரைத்த தமிழ் மறைகள். சைவசித்தாந்திகளாகிய நாம் எல்லாவகையாலுஞ் சிறப்புடையோம். அறுபத்துமூன்று நாயன்மார்கள் சைவ சமயங்கொண்டு சிவாலய வழிபாடு செய்து சிவகதியடைந்தனர். நாமும் அவர் ஒழுகிய சைவநெறி கடைப்பிடித்து ஒழுகி ஆலயவழிபாடும் மாகேசுரபூசை குருபூசைகளுஞ் செய்து, சைவசித்தாந்த நூல்களைக் கேட்டுச் சிந்தித்துத்தெளிந்து நிட்டைகூடிச் சிவானந்தம் பெறக் கடவோம்.

வஞ்சநெஞ்சத்தோடு முநிவரியற்றிய மயக்கநூல்களை யோதி மையலெய்திச் சிவநிந்தை சிவசாத்திர நிந்தை சிவாலய நிந்தை சைவ நிந்தை செய்து, உழலக் கடவேமல்லேம்.

இம்மாயாவாதிகளோ, வேதாகமமருளிய இறைவனது உபதேசத்தைக்கொள்ளாராயினர். அரிபிரமேந்திராதி தேவர்கள் கடைப்பிடித்துய்ந்த ஆலயவழிபாடாகிய சிவபூசையை நிந்தித்து பெருதூரமாயினர். முனிவர்கள் உண்மையெனக்கடைப்பிடித்த சிவநெறியையும் விரும்பாராயினர். சுக்கிரன் சூரபன்மனுக்குச் சொல்லிய ஆசுரமயக்க நெறியே பெரிதென்று மெச்சுவர்.

கடவுளாகிய சிவம் உண்டென்றால், என்று கொள்ளார். தாம்

பிரமமென்று மகிழ்கின்றனர். வைதிகரென்று வாயில் நுவல்வர். ஆசிரமநெறியிலமையார். சந்நியாசிகள் ஆசரிக்குங் கர்மமொன்றும் அறியார். கைவல்லிய வாதிஷ்டம் புடித்து நாம் பிரம மென்பதே சாதனமென்பர். சிவ வாக்கினும் வியாசர் வாக்கே பெரிதென்பர். சங்கராசாரியர் வடபுலஞ் சென்று போதித்த மாயாவாதமே பெரிதென்பர். சங்கராசாரியர் தென்னாட்டில் அத்தனைப் பரப்பாதொழிந்த சூழ்ச்சியை யோரார். சங்கராசாரியர் சிவாவதாரமாதலால் அவர் வாக்குப் பிரமாணமாமென்பர். சிவன் நேரே சொன்ன சிவர்கம உபதேசத்தை ஏற்க மறுப்பர்.

20. பரமசிவன் வடிவங்கொள்ளுமிடத்துச் சிற்கனமேனியாகிய சத்திகாரிய வடிவமே யன்றி மாயாவடிவங் கொள்பவரல்லர். ஸ்ரீகண்டபரமசிவனும் சிவலோகம் கைலாசங்களில் வடிவு கொள்வரேயன்றி, இவ்வுலகிற் பிறந்திறந்துழலார். சங்காசாரியரோ மலையாளத்திலே காலடி யென்னுங் கிராமத்திலே சிவகுருவென்னும் பிராமணருடைய மனைவியிற்றிலே கருக்தரித்து வளர்ந்து பூமியிற்பிறந்து மனித சரீரத்தோடு உண்டு உடுத்து உறங்கிப் பால கௌமாரப் பருவங்களையடைந்து தருணப்பருவத்திலே உயிர் நீங்கப்பெற்றவர். தம்முடைய பந்த நீங்கி முத்தி சித்திக்க வேண்டிச் சிவானந்தலகரி சிவபுஜங்கம் சௌந்தரியலகரி முதலியன செய்து, சிவபெருமானையும் உமாதேவியாரையுந் துதித்துத் திரிந்த ஒருவர். எல்லா வகையானும் அவர் ஒரு மனிதரேயன்றி வேறல்ல ரென்பது தெளிவாகும். மனிதருள் விசேடம் பெற்ற கல்விமானுகலாம். மாயாவாதத்துக்கு ஓர் சிறந்த ஆசாரியராகலாம். இவ்வளவேயன்றி, அவர் சிவாவதாரமாவதுஎப்படி? "நம் சோணேசர்-இல்லிற், பிறந்த கதையுங்கேளோம் பேருலகில்வாழ்ந்துண், டிறந்தகதையுங் கேட்டிலோம்" என்ற பாவலர் சொற்போலவே சிவன் பிறப்பிறப் பில்லாதவரென்று எல்லா நூல்களுங் கூறுகின்றன. இவரோ சிவன் சங்காசாரியராகப் பிறந்திறந்தார் என்கின்றனர். இவர் சொல்லினும் அறிவுடையோர் எவ்வாறு ஏற்பர். அன்றி, இவர் சிவாவதாரமோ அல்லவோ வென்று ஐயுறுமொருவர் வார்த்தையினும் நேரே சிவன் சொன்ன வாக்குவிசேடமோமென்பதை உணராததென்னே. இது என்னபாபுவசமோ!

சாபவசமோ! பரமசிவனிலும் சங்காசாரியர் பெரியவரா? வேத வியாசர் பெரியவரா? மற்றெவர் தாம் பெரியவராவர்.

21. மயக்க நீர்மையுடைய முனிவர், மனிதர் வாக்கில் மயங்காது, அநாதிமலமுத்தபதியாய்ச் சர்வஞ்ஞராயுள்ள பரமசிவன் பகர்ந்த வேத சிவாகமங்களையும் சைவசித்தாந்த நெறியையுமே மேலெனக்கொண்டு, சிவதீக்ஷை பெற்றுச், சரியை கிரியை யோக ஞானங்களில் ஏற்றதொன்று கொண்டு ஒழுகிச் சிவபெருமானது திருவருளைப் பெற்றுச், சிவகதியடைதற் குரியராதலே மரபாமென்பதை இனியேனும் உணரக்கடவர். "சைவமாஞ் சமயஞ்சாரும் ஊழ்பெறலரிது." காசிகானந்தர் முதலாயினோர் இயல்பாகவே சைவபரம்பரையிற் பிறந்தும் வளர்ந்தும் இருந்தனராக, பின், சிவதீக்ஷை பெறுதற்கும் சைவசமயவழி யொழுகுதற்கும் விடாது அவரை மாயாவாத மயக்கிலே தள்ளிய ஊழ் எத்தன்மையதோ. இவர் மரபினரெல்லாரும் சைவநலங்கொண்டு திருவருள் பேணிச் சுகிப்பாராக, இவர்க்கு இவ்வூழ் வாய்த்ததென்னையோ.

சங்காசாரியர் ஈற்றிலே ஸ்ரீகண்டாசாரியரையடுத்துச் சைவராயினரென்றும், சிவபூசையாதிய சிவபுண்ணியங்கள் செய்தனரென்றும் ஆன்றோர் பகர்வர். இவர் அஃதில்லையென்கின்றனர். சங்காசாரியர் சைவராகியதாற் சைவத்துக்கு வந்த ஆக்கமென்னை? இல்லையென்பதனால் வந்த நஷ்டமென்னை? ஒன்றுமின்றுமென அமையக்கடவர்.

22. சனகர், இராமர், கிருஷ்ணர் முதலாயினோர் சிவதீக்ஷை பெற்றுச் சிவபூசை செய்து சைவஞானம் பெற்றமை புராணப் பிரசித்தமாம். இவர் அதனை இல்லையென்று சொல்லுதலிற் பிரயோசனமில்லை. முனிவர்கள், அரசர்கள் யாவரும் ஆலயங்கடோறுஞ் சென்று சிவாகம முறைப்படி பூசித்து வழிபட்டவரேயென்பதைப் புராணங்கள் கோஷிக்கின்றன. இவர் அதனை மறுக்க வல்வரோ. இவ்வுண்மைகளையெல்லாம் காசிகானந்தரும் அவர் சார்பினரும் ஆய்ந்து தெளிந்து உண்மை கடைப்பிடித்து உய்தலே மரபாம்.

23. தூர்வையாசகப்படல வசனகர்த்தர் உண்மைநெறி கடைப்பிடித்தொழுகுந் தூய்மையுடையோர், சிவபக்தசிகாமணி,

பேரறிவாளர். தாம் அறிந்தவாறு சைவநெறி பேணி உய்யுநீர்மையர். சிவானந்தப் பேறுடையவர். "தாம்பெற்ற வின்பம் பெறுக விவ்வையகம்" என்று மற்றையோர்க்குஞ் சைவசித்தாந்த உண்மையைப் போதிக்கின்றனர். சைவநெறி கடைப்பிடித்தொழுகுஞ் சிவபக்தர் குழுமிய இந்நாட்டிலே மாயாவாத மதமெழுந்து இடர்செய்தலின், அது பொறுது அநுதாபமுற்று உண்மையை அச்சிவ பத்தருக்கு ஓதுகின்றனர். சைவசமயத்தை நிறுத்துதல் பெரும் புண்ணியமாம். ஆதலால், இவரும இவர் சார்பினரும் மாயாவாத மயக்கொழிந்து உண்மை கடைப்பிடித்துத் தம் பழைய சைவ மார்க்கத்திலே திரும்பி யொழுகுதல் நன்மையாம்.

சமய உணர்வு பொன்றிய இக்காலத்துப் பிரசங்கம் பத்திரிகை புத்தக வாயிலாக உண்மைகளை வெளியிடுதல் பெரியதோர் உபகாரமாம். ஆயின், நிந்தாமொழி யொழிந்த நல்விஷயங்களானல் மிக நலமாம். வாதஞ்செய்வோர் இதனைப் பரியாலோசிக்க வேண்டும்.

24. இனி, மாயாவாதநெறி இந்நாட்டிற் பரவுவதால் வருங் கேடென்னையெனின், அஃதொன்றோ, இரண்டோ! முதலிற் காசிகானந்தரையே உதாரணமாக வைத்துக்கொள்வோம். சைவமரபிலே பிறந்தவர், இப்பொழுது மாயாவாதத்திற் புகுந்த தோஷத்தால் தம் முன்னோர் கொண்டொழுகிய சைவநெறியை யிகழ்கின்றார். சிவநிந்தை செய்கின்றார். வேதவியாசர் கிருஷ்ணர் சங்கராசாரியரிலும் சிவனைக் குறைந்தவராக எண்ணுகிறார். சிவவாக்காகிய ஆகமங்களை நிந்திக்கின்றார். பசுவாக்காகிய மாயாவாதநூலை மேன்மையாகப் பாராட்டுகின்றார். சைவசமயம் இழிந்ததென்கின்றார். மாயாவாதமே சிறந்ததென்கின்றார். தேவார திருவாசக முதலிய அருட்பாக்களையும், திருமந்திரம், மெய்கண்டசாத்திரம் முதலிய உண்மை நூல்களையும் பிரமாணமென ஏற்க அருவருக்கின்றார். சைவசந்தான குரவர்களை இகழ்கின்றார் நாயன்மார் ஒழுகிய நெறியை ஏற்கின்றிலர். சிவாலயங்களை நிந்திக்கின்றனா. எல்லாம் மனிதசமாதி யென்கின்றனர். சிவாலயத்தைவிடத் தம் மாயாவாத மனிதசமாதிகளே உத்கிருஷ்ட மென்கின்றனர். சிவாலயங்களுக்குச் செய்யும் பூசை விழாக்களைக்காட்டினும் மாயாவாத மனித

சமாதிகளுக்கே ஆலயம் சிறப்பாக அமைக்கவேண்டுமென்றும் பூசை திருவிழாக்கள் சிறப்பாகச் செய்யவேண்டுமென்றும் சொல்லுகிறார். சைவசித்தாந்த வைபவம், சிவமகிமை, சிவாகமமகிமை, சிவாலய மகிமை, மெய்யடியார் மகிமைகளை ஒருவரும் உலகிற் பேசக்கூடாதென்கின்றார். பேசுவோரை நிந்தித்து அவர்க்குப் பெருந்தீங்குகளெல்லாஞ் செய்ய முயற்சிக்கின்றார். சைவசமய பரிபாலனத்தின்பொருட்டுப் பொருளுபகரிக்குஞ் சிவநேசச்செல்வரையும் நிந்திக்கின்றார். சைவப்பிரபுக்களை யடுத்துச் சைவத்திலுள்ள பற்றை விடுவித்து மாயாவாதம் போதித்துத் தம்வழி ஈர்க்கமுயற்சிக்கின்றார். சைவசமயத்தை யழித்து மாயாவாதத்தைப் பரப்பிவிடவேண்டுமென்று பகீரதப் பிரயத்தனஞ் செய்கிறார். இப்படி இவர் செய்யுந்தொல்லைகள் பல. இவர் ஒருவரால் இந்நாட்டுக்கும் சைவசமயத்துக்கும் இவ்வளவு கேடு விளையக்கூடுமானால், இவர் போல நூறுபேர் ஆயிரம்பேர் கிளம்பிவிட்டால், தமிழ்நாடு முழுவதும் பரந்துவிட்டால், அதன்பின்பு சொல்லவேண்டியதென்னே? இப்பொழுதே பல மாயாவாதிகள் அங்கங்கு பரந்து இவர்போலவே பல தீமைகள் செய்து சைவநெறிக்கு இடுக்கண் விளைத்து வருகின்றனர். அதனைக்கண்டு மனம்வருந்தும் அன்பர்கள் பலர். சைவசித்தாந்த நூலுணர்வுடைய வித்துவசிரேஷ்டர்களும், சிவபத்திவாய்ந்த செல்வப் பிரபுகுலதிலகரும் ஆலசியமாயிருந்தால், இன்னோரன்னவரால் இன்னும் எத்தனையோ தீங்குகள் சைவ சமயத்துக்கு உண்டாகிவிடும்.

அதுபற்றியே, இத்தனைகேடுகளையுஞ் சிந்தித்துச் சிவபத்தியிற் சிறந்த வித்துவசிரேஷ்டராகிய சொக்கலிங்கச் செட்டியாரவர்கள், இந்நாட்டுக்கு நேர்ந்த அனர்த்தங்களை நீக்கி "பாண்டிநாடே பழம் பதியாக"க்கொண்ட பரமசிவனுடைய திருவருள் விலாசத்தை ஓங்கும்படி செய்ய அரும்பாடுபடுகின்றார். காசிகானந்தரோ "குலத்தைக் கெடுத்த கோடரிக்காம்பு" போலத் தாம் பிறந்த சாதியார் பண்டு தொட்டுக் கொண்டுவருஞ் சைவசமயத்தை யழித்துக் கெடுத்துவிடப் பார்க்கின்றார். இவர் போல இன்னும் பலருளர். இவ்விருசார்பினருள் எவர் செய்வது பிழை

யென்று நாம் சொல்லலாம். இவற்றை யெல்லாம் காசிகானந்தர் அமைதியோடு சிந்திக்கக்கடவர்.

25. சைவசமயந் தோன்றிய காலம் முதல் எத்தனையோ மதங்கள் முளைத்தெழுந்து போராடியிருக்கின்றன. உலோகாயத மெங்கே, பௌத்தமெங்கே, சமணமெங்கே, மீமாஞ்சமெங்கே, சாங்கியமெங்கே. அவை யெல்லாம் அவ்வவ்வேழுந்த நசித்து விட்டன. அதினும் நத்தமிழ் நாட்டிலே பரமசிவனது திருவருள் சாந்நித்தியமா யிருக்கின்றது. பாபவசத்தால் ஒவ்வொரு நெறி தலைப்படினும் சிவபாதவிருதயர், மங்கையர்க்கரசியார், குலச்சிறை யார் போன்ற மெய்யன்பரது தவவிசேடத்தால், பரமசிவன்தாமாக வும் ஒவ்வோர் அன்பர் வாயிலாகவுங் கருணைபுரிந்து சைவ சமயத் தைக் காத்து வருகின்றார். ஆதலால், ஏதோ ஒரு கர்மவசத்துக்கு ஏற்ப மாயாவாதம் பரவிவரினும் பரமசிவன் இப்படியே விட்டுவிடு வாரென்று நினைக்கலாகாது. எங்கணும் மாயாவாத மயமாக்கி, சிவாலயங்களையெல்லாம் சமாதிகளாக்கி விடலாமென்று இவரன் னோர் சூழ்ச்சி செய்வதும் மகிழ்ச்சியுறுவதும் பயன்படமாட்டா தென்று நன்றாக உணரக்கடவர்.

காசிகானந்தரேனும் அவர் சார்பினரேனும் எதிர்வாதஞ் செய்ய எழுங்கால், பதரன்ன நிந்தைமொழிகளைவிட்டு, நியாயவரம் பில் நின்று சமய உண்மைகளை மாத்திரம் புகன்று வருவாரானால் அழகாயிருக்குமென்பதையும் உணரக்கடவர்.

"புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன அஞ்செ ழுத்துமே."

"வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

திருச்சிற்றம்பலம்.